தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 28-12-57 | சனிக்கிழமை | இதழ் 26

"காங்கிரஸ் சர்க்கார் மீது வழக்குத் தொடுப்பேன்!"

திராவிட இயக்கம் பல ஆண்டுகளாக சமுதாய மறு மலர்ச்சிக்காக பாடுபட்டு வருகிறது. 'சாதி ஒன்று; சர்வேஸ்வரன் ஒன்று' என்ற கொள்கையின் அடிப்படியில் அது பணி புரிந்து வருகிறது. அதற்காக அந்தக் காலத்தில் எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து நம்மைப் பழித்தார்கள். 'ஆண்டவனை இகழ்கின்றவர்கள்' என்ருர்கள். 'ஆண்டவனை மதிப்பது இகழ்வதாகாது. ஆண்டவனை மதிப்பதாக நடிப்பதே இகழ்வதாகும்' என்று நாம் மறுத்துரைத்தோம். நாடு அதை ஏற்றுக்கொண்டது. இப்போது அவர்கள் நம்மை 'ஜாதித்துவேஷிகள்' என்று சொல்ல ஆரம்பித்திருக்கிருர்கள்.

பொறுப்புள்ள பதவியிலுள்ள ஒருவர் சொல்லுகிருர், தமிழ்நாட்டில் தி. க.; தி. மு. க;-என்று இரண்டு வகுப்புவாதக் கட்சிகள் இருக்கிறது என்று. யார் அவர்? காங்கிரஸ் மகா சபையின் பொதுக் காரியதரிசி நாராயணன். அவருக்குத் தெரியுமா, வைக்கம் போராட்டத்தைப் பற்றி? அவர் அறிவாரா சேர்மாதேவி குருகுல நிகழ்ச்சியைக் குறித்து? பெருந்தன்மை மிக்க காங்கிரஸ்காரர்களைக் கேட்கிரேம் இந்த நாட்டில் சாதிகளுக்கு உயிர் கொடுத்தது யார்? நாங்களா? செத்துக் கொண்டு வந்த சாதி முறைகளுக்கு உயிர் கொடுத்து நிறுத்தியதே காங்கிரஸ் கட்சிதானே!

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் இரண்டு பெரு அரசியல் கட்சிகள் பல இடங்களில் போட்டியிட்டன. ஒன்று தி. மு. க; மற்ருென்று காங்கிரஸ்.

காங்கிரஸ் எந்த அடிப்படையில் ஆட்களை நிறுத்தியது? தஞ்சைமா வட்டத்திலே பிறந்து, சென்னையிலே வாழ்க்கை நடத்தும் நாவலர் நெடுஞ்செழியன் சேலத்திலே போட்டியிட்டார்? எந்த நம்பிக்கையில்? கொள்கையின் மீதுள்ள பிடிப்பால்!

தஞ்சைமா வட்டத்திலே பிறந்து சென்னையிலே வசிக்கும் கருணாநிதி குளித்தலையிலே போட்டியிட்டார்? எந்த நம்பிக்கையில்? கொள்கையின்மீதுள்ள நம்பிக்கையில்!

இராமனுதபுர மாவட்டத்திலே பிறந்து சென்னையிலிருக்கும் ஆசைத்தம்பி, ஆயிரம்விளக்கில் போட்டியிட்டாரே அது எதனுல்? சாதியின் அடிப்படையிலா? இல்லையே!

ஆனல் அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சி அபேட்சகர்களை நிறுத்திய லட்சணத்தைப் பார்த்தால்...கேவலம்!

திருமங்கலமா? நாயுடுவை நிறுத்து! மேலூரா? அம்பலகாரரை நிறுத்து! கோயம்புத்தூரா? கவுண்டரை நிறுத்து! மதுரையா? சௌராஷ்ட்ராவை நிறுத்து! விருத்தாசலமா? படையாச்சியை நிறுத்து!

—இதற்கு என்ன பொருள்? யார் சாதியை வளர்ப்பது?

இன்னொரு மானக்கேடான செயல் காங்கிரஸ் ஆட்சியிலே நடைபெறுகிறது. குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் காரியத்திலிருந்து தேர்தலில் போட்டியிடும் காரியம் வரை - எல்லா இடங்களிலும் சர்க்கார் அதிகாரிகள் 'உன் சாதி என்ன' என்று கேட்கிருர்கள். "சாதியைக் கேட்கலாமா?" என்ருல், "நான் என்ன செய்வேன்? சர்க்கார் கேட்கச் சொல்லுகிறதே" என்கிருர்.

இது யாருடைய ஆட்சியில்? ஸ்ரீமன் நாராயணனைப் பொதுக் காரியதரிசியாகக் கொண்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சியில்..சர்க்கார் ஒரு விஷயத்தைக் கவனம் வைத்துக்கொள்ள வேண்டும்! அடுத்த தேர்தலின் போதோ, அல்லது ஒரு பொது நிகழ்ச்சியிலோ 'உன் சாதி என்ன?' என்று என்னைக் கேட்டால் நான் சர்க்கார்மீது வழக்குத் தொடுக்கப்போகிறேன். சாதிமத பேதமில்லை என்று மனதார எண்ணினுல் சர்க்கார் பத்திரங்களில் சாதிப் பெயரைக் குறிக்கும் இடத்தை அழிக்கவேண்டும். செய்யுமா சர்க்கார்? எனக்கு நம்பிக்கை இல்லை. தேர்தலில் வெற்றிபெற வேண்டுமானுல் அவர்களுக்கு சாதிப் பற்று மிக முக்கியம்! அதுதான் அவர்களுக்கு யோக்கியதாம்சம்! அபேட்சகர்களின் திறமை, கட்சி முக்கியமல்ல!

சாதியை ஒழிக்க வேண்டுமானுல் காங்கிரசிலே இருக்கும் சாதி வெறியர்களின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் இப்போது ஓரளவு சமத்துவம் இருக்கிற

மதுரை எஸ். முத்து

தென்றல் அது சுயமரியாதை இயக்கத்தின்-திராவிட இயக்கத்தின் தி. மு. கழகத்தின் பணியினுலேயேயன்றி வேறு எந்தக் கட்சியினுலுமன்று.

இதை 'வடக்கத்தி'த் தலைவர்கள் உணரவேண்டும். ★

மீனிசாவின் காதலி

★ வேலை. எஸ். எழில் ★

சூடாமலை நாட்டின் கோட்டை வாயிலில் புலிக்கொடி சல சலத்துப் பரந்தது. சோழவீரர்கள் கோட்டையை மிகக் கவனமாகக் கண்காணித்து வந்தனர். ஆழ்கடலின் அமைதி எங்கும் சூழ்ந்திருந்தது. அதே சமயத்தில் அரண்மனை மன்றில் பொங்கும் இதயங்கள் ஆயிரமாயிரமாகக் கூடியிருந்தன. அரசமன்றத்தில் சோழ சாம்ராஜ்யத்தின் அதிபதி ராஜராஜன் கம்பீரமாக அமர்ந்திருந்தான். பக்கத்தில் இளவரசன் ராஜேந்திரன் அமர்ந்திருந்தான். வரிசையாக குரவன் உலகளந்தான்; ஈராயிரவன், கிருஷ்ணன் ராமன் முதலான மதியமைச்சர்கள் வீற்றிருந்தனர். அடுத்து சக்திவர்மன், பரமன் மழபாடியார் போன்ற தளபதிகள் அமர்ந்திருந்தனர். சேனாவிரர்கள், குடமலை நாட்டு குடிமக்கள் பல்லோரும் மன்றத்தை ஆக்கிரமித்திருந்தனர்.

ராஜராஜனின் கூரிய விழிகள் அவையை ஒருமுறை வலம் வந்தன. அந்தப் பார்வையின் நிட்சண்யத்தைத் தாங்கமுடியாத மக்கள் தலையை தாழ்த்திக்கொண்டனர்.

"அமைச்சரே, குடமலை மன்னன் மீனிசாவை அழைத்து வரலாமே." ராஜராஜனின் குரலில் கட்டளை பிறந்தது.

"பரமன் மழபாடியாரே......!" அமைச்சர் ஈராயிரவன் கண்ணும் வாயும் பேசின. சொற்கள் பிறந்த வேகத்தில் மழபாடியார் எழுந்து மறைந்தார்.

மறுகணம் குடமலை சிற்றரசன் மீனிசாவுடன் திரும்பிவந்தார் மழபாடியார். தோற்ற மன்னன் தானே என்று மீனிசாவை எவ்வித கவுரவக் குறைவுக்கும் ஆளாக்கவில்லை கூடியிருந்த ஆயிரமாயிரம் விழிகள் மீனிசாவை அனுதாபமும் பரிதாபமும் சூழகவனித்தன. குடிமக்களின் கண்ணீரும் தளும்பியது. தங்கள் நாட்டு மன்னன், மாற்றுவேந்தனிடம் கைகட்டி நிற்பதைக் காண, எந்த உண்மையான தேசபக்தியுள்ள குடிமகன்தான் வேதனைப் படாமலிருப்பான் ?

மீனிசாவின் விழிகளில் வழக்கம் போல் வீரம் ஜ்வலித்தது. அலட்சியப் புன்னகை மலர்ந்தது. அரசமன்றத்தை ஒருமுறை பார்வையிட்டான். மன்னர் மன்னனை வணங்கி நின்றான். அரசமன்றின் மாடிகளில் பேச்சரவம் கேட்கவே விழிகளை மேல்நோக்கினான் அழகு வரிசை வீற்றிருந்தது. சோழர்குல சுந்தரியும், ராஜராஜனின் அரும் புதல்வியுமான குந்தவை தனிப் பொலிவோடு அமர்ந்து ராஜ சபையை கவனித்தபடி இருந்தாள். அவளின் இருக்கையை பிடித்தபடி.. சோகபிம்பமாய்...வாடிய மலர்க் கொடியாய்.....நின்றிருக்கிறாளே.... ராசகேசரி! ஒரு கணத்தில் ஆயிரம் முறை சுழன்று அவளை ஊடுருவின மீனிசாவின் விழிகள்.

"மீனிசா...!" ராஜராஜனின் குரல் முழங்கியது. நினைவு திசை மாறியிருந்த மீனிசாவை அந்த அழைப்பு அதிரவைத்தது. எல்லோர் விழிகளும் மீனிசாவை பற்றின.

"சோழப் பேரரசே..." மீனிசா மரியாதையோடு நடந்துகொண்டான்.

"எனது தூதர் மழபாடியாரிடம் கப்பம் செலுத்திவிட்டிருந்தால், இந்தப் போர் மூண்டிருக்காதே மீனிசா!"

"உண்மைதான் மன்னா...! ஆனால், உரிமையையும் அல்லவா நான் தங்களுக்கு கப்பமாக கட்டி விட்டிருப்பேன்."

"இப்படிப் பேசித்தான் உரிமையை இழந்து கிடக்கிறாய்"

"உரிமைக்காகப் போரிடுவதும், அதில் மடிவதும் வீரனின் லட்சணமல்லவா அரசே? போர்க்களத்திலேயே மடியும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை." மீனிசாவின் வார்த்தைகளில் பழைய சரளமான துடிப்பு தெரிந்தது.

"மீனிசா, வில்லம்புகளை எய்வதைப்போன்றே சொல்லம்புகளையும் சாமர்த்தியமாக எய்கிறீர். சேரரும், பாண்டியரும், ஈழரும் எம்மடி பணிந்து கப்பம் செலுத்துகின்றனர். நீரோ போர் முகத்தில் எவர் வரினும் பொருது நிற்பேன் என்று தோள் தட்டினீர். இப்போதோ அரசமன்றில்...தனித்து நிற்கிறீர்"

ராஜராஜனின் குரலில் கேலியும் வேகமும் தொனித்தது.

"சோழப் பேரரசே! தங்களின் புகழ் அறிவேன். புலிக்கொடியின் மகத்துவம் தெரிந்தவன் நான். முக்கூடலும், புகழ்பெற்ற ஈழமும் தங்கள் தாள் பணிந்து கிடப்பதை உணர்வேன். அறிந்தும் எங்கள் சுதந்திர வாழ்வை இழக்கும் 'துணிவு' ஏற்படவில்லை, அரசே!" நிதானத்தை இழக்காமல் பேசினான் மீனிசா.

"உங்கள் உரிமைக்காக என் பெரும் புகழை இழக்கமுடியாது, மீனிசா! வலியோரெல்லாம் என் முன்னே தள்ளாடும்போது, நீமட்டும் மல்லாடுவது சரியல்ல, இனி மேலும் முறையாக நிறை குறையாமல் திரை செலுத்துவாயல்லவா?" ராஜராஜனின் பேச்சில் குறும்பு வழிந்தது,

"மன்னா! முடியாத ஒன்றை செய்யச் சொல்லாதீர். அடிமையாகி அரசாள்வதைக் காட்டிலும், சுதந்திர மனிதனாக மாள்வதையே விரும்புகிறேன். வேந்தே! தீர்ப்பு வழங்கலாம்..." மீனிசாவின் உறுதி எல்லோரையும் திகைப்படைய வைத்தது. குடிமக்கள் பயத்தால் குமைந்து போயினர்.

சோழ அமைச்சர்கள், தளபதிகள் முதலியவர்களின் விழிகள் தீப்பந்தங்களைப்போன்று ஒளிர்ந்தன. இளவரசன் ராஜேந்திரனின் உள்ளமும் உடலும் திமிறின. சோழப் பேரரசன்மட்டும் புன்னகைத்தவழ "மீனிசா, உன் முடிவு இதுதானா?" என்றான். மீனிசாவின் வாழ்வும் சாவும் அவன் பதிலில் ஊசலாடியதாக மக்கள் நினைத்து தவித்தனர்.

"ஆமாம் அரசே!" வார்த்தைகள் வெடித்து சிதறின. மீனிசாவின் முகத்தில் சிரிப்பின் கீறல்கள்! தெளிவின் சுடர்!

அனைவர் விழிகளிலும் ஆத்திரம் அனுதாபம்! மன்னவனின் தீர்ப்பை துடிப்போடு கவனித்தனர். விழிகள் சிவக்க, உதடுகள் பதற குரவன் உலகளந்தான் எழுந்தார், "சோழப் பேரரசே! மீனிசாவின் பேச்சில் காரியத்தை சாதிக்கும் கருத்தோட்டத்தைக் காணோம். வெறும் வீரியம்தான் சுடர் தெறிக்கிறது. சோழ சாம்ராஜ்யத்தை அறிந்தும் அறியாமலும் அவமதிக்கிறார், மீனிசா" மேலும் பேச முயன்ற அவரை ராஜராஜனின் குரல் தடுத்தது.

"அமைச்சரே, அவசரம் வேண்டாம்" மன்னவனின் குறுக்கீடு எல்லோரையும் வியப்படைய வைத்தது. அவையை அமைதி கும்மிருட்டைப்போன்று சூழ்ந்திருந்தது.

"வேந்தே...!" பயங்கரமான அலறலுடன் மாடியிலிருந்து பெண்ணொருத்தி தடார் என்று தரையில் வந்து விழுந்தாள். தலை குப்புற வந்து விழுந்த அப்பெண்ணின் மண்டை இரு கூறுகப் பிளந்து இரத்தப் பிரவாகமெடுத்தது. அரசமண்டபம் அலங்கோலப்பட்டது.

மீனிசா தாவிச் சென்று அப்பெண்ணின் உடலைத் தாங்கி மடி மீது வைத்துக் கொண்டான். ராஜராஜன் துடி துடிப்போடு பெண்ணருகே ஓடி வந்தான். மற்றவர்களும் வந்து அங்கே சூழ்ந்துக் கொண்டனர். ஆயிரமாயிரம் விழிகளும் இதயங்களும் கண்ணீர்விட்டு அழுதன. குந்தவை பரபரக்க இரங்கி வந்தாள். வீரச் சுடர் தெறித்த மீனிசாவின் விழிகளில் கண்ணீர் தளும்பி வடிந்தது. விழுந்த கணத்திலேயே அப்பெண்ணின் உயிர், அழகான உடலைவிட்டுப் பிரிந்தது.

"ராசகேசரி...மீனிசாவின் இந்த அழுகுரலை உணர்ச்சிகள் அழுத்திப் பிடித்தன. அப் பெயரைக் கேட்டதும் சோழர் குலமே வியந்தது. "ராசகேசரியா?" ராஜராஜன், ராஜேந்திரன், குந்தவை ஆகிய மூவரும் ஒரு சேர கேட்டுக்கொண்டனர். அவர்கள் இதயங்களில் அந்தப் பெயர் கண்ணிமைப் போதில் கணக்கற்ற முறை மின்னலிட்டது.

"மீனிசா! இவள்...இந்த ராசகேசரி..." குந்தவை கலங்கினாள். அவள் கண்கள் நீர்வீழ்ச்சியாகின.

"நம்ம ராசகேசரியா, குந்தவை?" மன்னவனின் குரலில் நடுக்கம் இருந்தது.

மீனிசாவின் விழிகளில் ஏக்கம் ...வறட்சி! "வேந்தே! இளவரசி...! இவள்...இந்த ராசகேசரி உங்கள் தேச ராசகேசரிதான்." மீனிசா விம்மினான். விக்கினான். அந்த நிலை ...அனைவரையும் உருக வைத்தது.

"அப்பா.! அப்பா.! நான் பெரும் பாவியப்பா.!" குந்தவை கதறிவிட்டாள்.

"நீ என்னம்மா பேசுகிறாய், குந்தவை?" மன்னன் வினவினான்.

"அப்பா, ராசகேசரியை நான் தெரிந்துக்கொள்ளவில்லை. அப்பா! அவள் என்னிடம் மன்றாடினாள், கெஞ்சினாள். கண்ணீர் விட்டுக் கதறினாள். பாவி நான் பெண்ணாக இருந்தும் சிறிது நேரம் கல்லாகிப் போனேன். அப்பா, அதன் பலன் தான் அருமையான கலையரசியை இழந்துவிட்டேன்." குந்தவை மேலும் பேச முடியாமல் அழுகை வயப்பட்டுப் போனாள். குழந்தையைப் போன்று தேம்பினாள்.

"ராசகேசரி உன்னிடம் மன்றாடினாளா? கெஞ்சினாளா? எதற்காக யாருக்காக வேண்டினாள்? என்ன சொல்லுகிறாய், குந்தவை?"

"மீனிசாவின் மனமறிந்த அவள் அவரின் விடுதலைக்காகத்தானப்பா கெஞ்சினாள். அவளுடைய உருக்கமான வேண்டுகோள் என்னை உருக வைத்தது. உங்களிடம் வேண்டி அவருக்கு விடுதலை வாங்கித்தரத்தான் நினைத்தேன். பெண்ணுக்காக பெண் இதயம் இரங்கிற்று. ஆனால், மீனிசாவின் வார்த்தைகள் என்னை கல்லாக்கிவிட்டன. அவரின் பேச்சில் ஆணவம் குதிப்பதை உணர்ந்தேன். எனக்கு ஆத்திரமாக வந்தது. 'அடி பெண்ணே, உன் மீனிசாவுக்கு மரணம் தான்' என்று கருவினேன். என் பதிலைக் கேட்ட மாத்திரத்தில் அவள் மாடியிலிருந்து விழுந்து விட்டாள், அப்பா." குந்தவையின் துயரம் முகத்தில் கப்பியது.

"ஐயோ, என்ன தவறு செய்துவிட்டாயம்மா குந்தவை! மீனிசா போன்ற மாவீரனை தமிழகத்தில் எங்கும் காணமுடியாதே.' தரணி புகழ் பெற்ற தார்வேந்தனிடமே அஞ்சாமல் உரிமையை கேட்டானே.! தோல்வியிலும் வெற்றி காணத் துடிக்கும் வீரனல்லவா, மீனிசா.! விடுதலை அளித்து, மீண்டும் மீனிசாவே நாட்டை ஆளவேண்டும் என்றல்லவா தீர்ப்பு வழங்க இருந்தேன். குந்தவை, நீயுமா என் மனத்தை அறியும் ஆற்றலற்றுப் போனாய்?" வேந்தன் துடி துடித்தான்.

ராஜராஜனின் பேச்சு எல்லோரையும் வியப்பில் தள்ளியது. குடிமக்கள் குதூகலத்தால் ஆரவாரித்தனர். மீனிசாவும் தீர்ப்புகேட்டு அதிசயித்தான். ஆனாலும் அவன் இதயத்தை கவ்வியிருக்கும் துயரம் அவன் வேதனையின் உருவாகக் காட்சியளித்தான். தாங்கியிருந்த ராசகேசரியின் உடலை தரையில் கிடத்தினான். ரத்தக்கறை படிந்த கரங்களை மன்னவன் முன் நீட்டினான். "வேந்தே, இக் கரங்களுக்

— 11ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 4 ‖ 28—12—57 ‖ இதழ் 26

மனோகரன் குரல்!

முப்புறமும் கடல் சூழ்ந்த முனை நிலமாம் குமரி மண்ணில் முத்தமிழ் வித்தகர்கள் முடியமைக்கும் திருப்பணியில் இன்றையத் தினம திரண்டிருக்கிறார்கள். தென்னாட்டின் ஓரக்கரையில், திராவிடத்தின் அணி வகுப்பு நடைபெறுகிறது. காவிய உலகின் குயில்களும், கலையுலகின் வெண் புருக்களும் தவழ்ந்து விளையாடிய நாஞ்சில் நறு நிலத்தில் தி. மு. கழகத்தின் மாநாடு நடந்துகொண்டிருக்கிறது.

மாநாட்டின் முடிவுகளை, மாணிக்கத்தோள் படைத்த தமிழர் படை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. நம்மைக் காட்டிலும் மாற்றுக் கட்சி நண்பர்கள் அதிர்ச்சியோடு எதிர் நோக்கியிருக்கின்றனர்,

அண்ணா என்ன சொல்கிறார்? தி. மு. க. என்ன சொல்கிறது?—என்ற நிலைமை தமிழகத்து அரசியலில் தோன்றிவிட்ட பிறகு, நடைபெறும் மாநாடுகளில் நாஞ்சில் மாநாடு எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்ததாகும்.

திராவிடத்தின் தனித்தன்மையை அதற்கான ஆற்றலை எங்கே யாரிடம் கூறவேண்டுமோ அங்கே அவ்வப்போது எடுத்துரைத்து ஏகாதிபத்திய வெறியர்களை மடக்கித் தள்ளும் அரிமா நோக்குடைய சொல்வலர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறார். நாஞ்சில் மாநாட்டு வெற்றிக்கு இது ஒரு முன்னறிவிப்பாகும். ஒளி படைத்த லட்சோபலட்சம் கண்களை ஒரே நேரத்தில் காணும் அவர், பிற நாட்டு ஒளி விளக்குகளின் அருகாமையிலே நின்று புகழ் தேடிக்கொண்டிருக்கும் பண்டித நேருவுக்கு திராவிடத்தின் நிலையை கம்பீரமாக எடுத்துரைக்க இந்த மாநாடு நிச்சயமாகத் துணைபுரியும். இமயத்திலிருந்து குமரிக்கு வந்திருக்கும் அவர் தாய்நாட்டு இளவல்களுக்கு நல்லதோர் திட்டத்தைத் தரப் போகிறார்.

இதைத் தவிர, மாநாடு இன்னொரு சிறப்பைப் பெறுகிறது.

தி. மு. க. வெறும் எழுத்தாளர்களையும், பேச்சாளர்களையும் மட்டுமே கொண்டது என்று எட்டி நின்று பேசுவோர் பெருமூச்சு விடும் வகையில், நாஞ்சில் மாவட்டம் திறப்பாளராக மதுரை திரு. டாக்டர் அருணாசலத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

படித்துப் பட்டம் பெற்று, கட்சி சார்பற்ற தொழில் துறையில் இருப்போர் எப்போது ஒரு கட்சிக்கு ஆதரவு கொடுத்து, துணிந்து பணிபுரியத் தலைப்படுகிறார்களோ அப்போதுதான் அந்தக் கட்சி மக்களின் கட்சியாக வடிவம் பெறமுடியும் தி. மு. க. அந்த வடிவத்தைக் கடந்த சில நாட்களாகப் பெற்று வருகிறது. நாஞ்சில் அதை உறுதிபடுத்திவிட்டது.

சம்பத் தலைவர்! டாக்டர் அருணாசலம் திறப்பாளர்!

அண்ணாவும், நாவலரும் கலந்துகொள்கிறார்கள்.

மாநாட்டின் சிறப்புக்கு-எடுக்க இருக்கும் முடிவுகளுக்கு - எதிர்பார்த்த தோழர்களின் விருந்துக்கு இவை அச்சாரம்!

மாநாடு கூடும் இடமோ மனோகரமான இடம். மூன்று பக்கமும் கடல்! மேகத்தைக் கிழித்து வரும் முழு நிலவையும், மேதினியைச் சுற்றி அலுத்துப் போன கதிரவனையும் ஒரே நேரத்தில் காட்டும் அற்புதத் தமிழ் பூமி. வளம் கொஞ்சும் விளை நிலம்.

அரசியல் சூழ்நிலையும் மனோகரமானதுதான். தள்ளாத வயதில் பெரியார் சிறையில் இருக்கிறார்; பொல்லாத வடவர்கள் நம்மை ஒருமுறைக்குப் பல முறைத் திட்டித் தீர்த்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் நாகர்கோயிலில் அரசியல் மாநாடு.

மனோகரமான இடம்!

மனோகரமான அரசியல் சூழ்நிலை!

அழைப்பவரோ நமது மனோகரன்!

மாநாட்டின் முடிவும் செயலும் நம்மை-திராவிடரை உலக சரித்திரத்தில் ஒரு மனோகரமான இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

தென்றல் பொங்கல் மலர்

'தென்றல்' பொங்கல் மலர் இந்த ஆண்டு மிகச் சிறப்பாக வெளி வருகிறது. கிரௌன் பெரிய அளவில் நல்ல காகிதத்தில் ஏராளமான பக்கங்களோடு மலர் தயாராகிறது. இதுவரை நமக்குக் கிடைத்திருக்கும் எழுத்தோவியங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. மற்றவர்களின் கருத்தோவியங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.

★ **இலக்கியக் கட்டுரைகள்**

நாவலர் நெடுஞ்செழியன்
ஞா. தேவநேயப் பாவாணர்
பன்மொழிப்புலவர் அப்பாதுரையார்
டாக்டர் ராசமாணிக்கனார்
டாக்டர் மு. வரதராசனார்
டாக்டர் அ. சிதம்பரனார்
பேராசிரியர், ஔவை துரைசாமி
பேராசிரியர், அ. கி. பரந்தாமனார்

★ **சிறு கதைகள்**

கே. ஏ. மதியழகன், பி. ஏ.
இரா. செழியன், எம். ஏ.
தில்லை-வில்லாளன், எம். ஏ.
மா. கி. தசரதன், எம். ஏ.
க. அறிவழகன், எம். ஏ.
இராதாமணாளன்
தில்லை. மறைமுதல்வன், எம். ஏ.
நா. பாண்டுரங்கன், எம். ஏ.

★ **கட்டுரைகள்**

க. அன்பழகன், எம். ஏ.
சி. பி. சிற்றரசு
எம். எஸ். வெங்கடாசலம், எம். ஏ.
உ. பில்லப்பன், எம். ஏ.
முகவை. ஆர். எஸ். பாண்டியன்
மு. சண்முகம்
தென்னரசு

★ **காவியம்**

வாணிதாசன்
முடியரசன்

★ ஆசிரியர் கண்ணதாசன் எழுதும், — **'அழகி'**
—காவியம்

★ **பல வண்ண முகப்பு!**

அண்ணாவின் அழகோவியம்-ஆர்ட் காகிதத்தில்!
எம். ஜி. ஆர். படம்-மூவண்ணம்!

இன்னும்

பலவுண்டு! அத்தனையிலும் எழிலுண்டு!

★

விலை ரூபாய் இரண்டு

★

தென்றல் :: சென்னை-6.

★ 'தென்றல்' அடுத்த இதழ், பொங்கல் **மலராக** வெளிவரும்.

மன்னன் முடி நட்டான்!

மங்கை கவி நட்டாள்!

பொழுது விடியவில்லை. அரண்மனையின் நுனிக்கலசங்களில் மட்டும் வெய்யவன் ஒளியின் சாயல் தென்பட்டுக் கொண்டு இருந்தது. தங்கத்தாலான அந்தக் கலசங்களில் அந்த ஒளிபடவே அவை துணைக் கிரகங்கள்போல சுடர்விட்டுக் கொண்டிருந்தன. தெருவில் நடமாட்டம் எதுவுமில்லை. அங்கங்கே உழவர் நடந்துசெல்லும் ஓசையும், அவர்கள் உரையாடலின் ஓசையும் தெளிவின்றிக் கேட்டன. தூரத்தே கழனிகளில் பாடுகின்ற தென்பாங்கும், ஏற்றப் பாட்டும், நடவுப்பாட்டும் காற்றில் தவழ்ந்து வந்தன.

நிம்மதியாக உறங்கிக்கொண்டிருந்த மன்னன் ஏகம்பவாணன் திடுக்கிட்டெழுந்தான். முதல் நாள் இரவு நடந்த களியாட்டங்கள் முடிய அதிக நேரமாகிவிட்டது. தன் அரண்மனைக்கு விருந்தினராக வந்த சேர, சோழ, பாண்டியரின் மனமகிழ்ச்சிக்காக அத்தகு களியாட்டங்களை நடத்த ஏற்பாடு செய்திருந்தான் அவன். அவை முடிந்து அவன் துயில் கொளச் சென்றபொழுது இரவு நடுயாமமாகிவிட்டது. அலுப்பின் காரணமாகத்தான் அதிக நேரம் உறங்கிவிட்டதை அறிந்த அவன் வெட்கினான். தன் மக்களெல்லாம் கழனியில் பாடுபடும்போது தான் மட்டும் கவலையின்றி உறங்கியது எவ்வளவு தவறு என்பதை அவன் உணர்ந்து கொண்டான். எனவே, விரைவில் தன் காலைக்கடன்களை முடித்துப் புறப்பட்டான்.

★

கழனி செல்ல அவன் புறப்பட்டுவிட்டான். இந்நிலையில் அவனைப் பார்க்கும் எவரும் அவன் புவியாளும் மன்னன் என்றால் "பொய்" என்றுதானே உரைப்பர். அரசனுக்குரிய ஆடையாபரணமோ அலங்காரங்களோ, ஆணவமோ எதுவுமோ அங்கு இருக்கவில்லை. அரையில் ஒரு சிறு ஆடை. மார்பில் குறுக்கே இழுத்துக்கட்டப்பட்ட சிறு துண்டு, கையில் கலப்பை- இந்தக் கோலத்தில் கிளம்பிய அவன் ஏதோ நினைத்துக்கொண்டவனாக சற்றே நின்றான்.

"மெல்லி"...

அவன் அழைத்த ஓசை அடுத்தவர் காதிற்குக்கூடக் கேட்டிராது. அவளுக்கு மட்டும் எப்படிக் கேட்டதோ!

அழைத்தீர்களா பிரபு"...என்று கேட்ட வண்ணம் குதித்தோடி வந்தாள் அவள்.

"தங்களைக் காணும்போது எனக்கு மிகவும் பொருமையாக இருக்கிறது பிரபு. எனக்கு எல்லா வகையிலும் சமஉரிமை தந்தீர்களே. இதற்கு மட்டும் மறுக்கிறீர்களே. தாங்கள் உழவனாக மாறும்பொழுது தங்களுக்கேற்ற உழத்தியாக நான் மாறக் கூடாதா! அத்தான்." வருத்தத்தில் தோய்ந்து உருக்கமாக வெளிவந்தன வார்த்தைகள். ஏகம்பவாணன் சிரித்தான்.

"மெல்லி.. ஏது? இன்று புறநானூறு படித்தாயா என்ன?... போர்க்குணம் அதிகமாக உள்ளதே..."

அவன் குரலில் இருந்த இனிமை அவள் இதயத்தில் இன்பக் கிளுகிளுப்பை ஊட்டியது. அதை மறைக்க முயன்றவளாக அவள் பேசினாள்.

"போங்கள் அத்தான் இப்படிப் பேசிப் பேசியே என்னை ஏமாற்றுகின்றீர்களே தவிர என் கேள்விக்குப் பதில் தரமாட்டேனென்கிறீர்களே?"

அவன் அவளருகில் சற்றே நெருங்கினான். அவனது அந்த அண்மை அவளுக்குப் புல்லரிப்பை யூட்டியதோ என்னவோ. அவள் நாணத்தால் சிவந்த முகத்தைக் கவிழ்த்துக்கொண்டாள். இன்னும் அருகில் நெருங்கிய ஏகம்பவாணன் அவள் முகவாய்க்கட்டையைப் பற்றித் தன் பக்கம் திருப்பினான்.

"மெல்லி...எனக்கு மட்டும் ஆசையில்லையா என்ன? கலப்பை தூக்கி நான் முன்னால் போக நீ கஞ்சிக் கலயமேந்திப் பின்னால் வர வேண்டும். ஏற்றப் பாட்டு நான் பாட எதிர் நடவுப் பாட்டு நீ பாட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு உள்ளது கண்ணே. என் கண்முன் ஏனைய உழவர்கள் தம் காதலியருடன் களித்திருக்கும்போது என் நினைவெல்லாம் உன்மீது தான் கண்ணே. ஆனால்.. உன் மூலம் எனக்குக் கிடைக்கப் போகும் செல்வமல்லவா அதைத் தடை செய்கிறது."

அவன் செல்லமாக அவள் கன்னத்தில் தட்டினான். அவள் முகம் அந்தி வானமாயிற்று.

"மெல்லி...இன்று வந்துள்ள விருந்தினரை நன்கு கவனி. உன் பாட்டில் அந்தப்புரத்தில் அமர்ந்தபடி... அகநானூற்றில் ஆழ்ந்துவிடாதே. நான வருகிறேன்."

அவன் வெளிக் கிளம்பினான்.

அரண்மனை மாடத்தில் நின்றபடி அவன் நடையழகைப் பருகிக் கொண்டிருந்தாள். மெல்லி... அரசன் எனும் நினைவே இல்லாமல் உழவனிலும் எளிய உழவனாய் நடந்து செல்லும் ஏகம்பவாணன் மனைவி தானென்ற நினைவு வந்ததும் அவள் பூரித்தாள். மன்னனும் மக்களும் சமமே என்ற சமத்துவத்தை மாநிலத்திற்கே எடுத்துக் காட்டுபவனாயிற்றே அவன்...

★

"அம்மா அவர்கள் வந்திருக்கிறார்கள்."

"எவர்களடி?"

"மூவேந்தரம்மா...... துயில் எழுந்ததும் தூய் நீராடச் செய்தோம். வெண்பட்டுத் துகில் அளித்தோம். அகிலும், புகையும் மணம் பரப்ப அவர்களுடலில் படும்படி செய்தோம். அதன் பின்னர் உணவு அருந்தினர். அதன் பின்னர் அரசரெங்கே என்றனர். அவர் களம் சென்றுள்ளார் என்றேன். போர்க்களத்திற்கா என்றனர். இல்லை நெற்களத்திற்கு என்று சொன்னேன். அரசியாரைக் காணமுடியுமா என்றனர். ஓடி வந்தேன் அம்மா."

"அப்படியா மிக நல்லது. நான் வருகிறேன் என்று சொல்"

"நல்லதம்மா"

சேடி ஓடினாள். எளிய முறையில் தன்னை அலங்கரித்துக் கொள்ள எழுந்தாள் அரசி.

★

ஏகம்பவாணன் கம்பனும் புகழும் பான்மை பெற்ற ஓர் அரசன் நாட்டு அளவிலே சிற்றரசன்தான். ஆனால் படிப்பிலே, பண்பாட்டிலே, பாவலரைப் போற்றும் பான்மையிலே அவன் மிகப் பெரும் அரசன். அவன் பாக்களைச் சுவைக்க மட்டும் அறிந்தவனல்ல. அதுபோற் பாடவும் தெரிந்தவன். மக்களும் மன்னனும் சமமானவரே என்பது அவனது கொள்கை. அந்தக் கொள்கை வழியிலேயே மனைவியும் தானும் ஒரு ஏர்க்காலில் கட்டிய இரு எருதுகள் போன்று இயங்கினால்தான் வாழ்க்கை எனும் வயலில் நல்ல பலன் காண இயலும் என்று உணர்ந்தான் அவன். அதன் விளைவாகத் தன் மனைவியையும் நன்கு கல்வி கற்கச் செய்தான் அவன். அவளும் தமிழை நன்கு கற்று அவனைப்போன்றே கவியியற்றும் ஆற்றல் பெற்றாள். அவளது அந்தத் தேர்வு கண்டு அடக்க முடியாத மகிழ்ச்சிகொண்டது அவன்தான். அவனுக்கேற்ற அரசியாய் வாய்த்தவள்தான், ஆரணங்கு மெல்லி. ஆண், பெண் இரு பாலரும் அறிவியலில் ஒன்றுபட்டவரே என்பது அவளது அசைக்கமுடியாத நம்பிக்கை. அந்தப்புரத்தில் அடைபட்டுக் கிடந்தவண்ணம் அகில உலக வம்பையும் விலைக்கு வாங்கும் ஏனைய மாதரைப் போலல்லாமல் அவள் அரசி எனும் சொல்லினிலக்கணமாகவே திகழ்ந்தாள். அது கண்டுதான் மூவேந்தரை வரவேற்று உபசரிக்கும் பொறுப்பை அவளிடம் விட்டுவிட்டு வயலுக்குச் சென்றான் ஏகம்பவாணன்.

★

"வாருங்கள் ஐயன்மீர்! வணக்கம். அப்படி ஆசனத்தில் அமருங்கள்" என்று தங்களை வரவேற்ற வனிதையைக் கூர்ந்து நோக்கினர் மூவேந்தரும். அரசி என்றதும் அவர்கள் அழகான, ஆடம்பரமான, அணிகலன்கள் தரித்த ஆயிழையொருத்தியைத்தான் எதிர்நோக்கினர். ஆனால் வந்து நின்றவளோ நேர்மாறு. அழகானவள்தான் என்றாலும் மிக எளிய ஆடைகளை அணிந்து அடக்கத்தின் உருவாகத் திகழ்ந்தாள் அவள். சூரியனின் கதிரொளியை நோக்கிக் காத்திருந்தவர்களுக்கு சந்திர ஒளி கேவலமாகத் தானே படும். அவள் ஒரு அரசி—அத்துடன் பெண். அவளுக்கு மதிப்பளிக்கவேண்டும் என்பதையே மறந்தவர்களாய்த் தங்கள் மனம்போன போக்கில் பேசத் துவங்கினார்கள். நல்ல முறையிலேயே துவங்கப்பட்டது உரையாடல்.

"எங்கேயம்மா தங்கள் கணவர்?"

"அவர் கழனிக்குச் சென்றுள்ளார்."

அவர்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. தங்களுடன் பேசிக்கொண்டிருப்பது பேரரசியா அல்லது பணிப்பெண்ணா என்ற ஐயமெழுந்தது.

"...மன்னிக்கவேண்டும் தாங்கள்...தாங்கள் மகாராணி மெல்லியள் தானே?" மெதுவாகக் கேட்டான் சேரன்.

மெல்லிக்குச் சிரிப்புப் பொங்கியது. அதை அடக்கிய வண்ணம் அவள் பதிலிறுத்தாள்.

"ஆம் ஐயா நான் மெல்லிதான் மன்னன் ஏகம்பவாணரை மணம் புரிந்த மங்கைதான்."

"நல்லதம்மா. தங்கள் உரை கேட்டு மகிழ்ந்தோம். மன்னர் எங்கே என்றுதான் கேட்டோம்."

— 9ம் பக்கம் —

திருப்பூர் தமிழ்ச்செல்வி

கேள்விப் பெட்டி

பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

ஆ. சுப்பிரமணியம்
பாளையங்கோட்டை

1. சென்னை அரசாங்கத்தாரால் பாரதியின் கவிதைகளைத் தொகுத்து அச்சிடப்பட்டு வெளி வந்த நூலில் (1954 ஆண்டு 265-ம் பக்கத்தில் 'மறவன் பாட்டு' என்ற தலைப்பின் கீழ் உள்ள பாட்டுகளில், சில அடிகளை எழுதாமல் வெறுமனே விட்டு இருக்கிறார்கள் ? இதன் காரணம் என்ன ? அந்த அடியைப் பூர்த்தி செய்து தாருங்கள்.

"பேராசைக் காரனடா
பார்ப்பான்-ஆனால்
பெரியதுரை என்னினுடல்
வேர்ப்பான்;
யாரானாலும் கொடுமை...
......................"

"பிள்ளைக்குப் பூணூலாம்
என்பான்-நம்மைப்
பிச்சுப் பணங்கொடெனத்
தின்பான்
கொள்ளைக் கேசென்
...."

"சொல்லக் கொதிக்குதடா
நெஞ்சம்—வெறுஞ்
சோற்றுக்கோ வந்ததிந்தப்
பஞ்சம் ?
....
.............................."

2. 'ஆரியன்' என்பதன் பொருள் என்ன ? ஆரியரால் இடப்பட்ட பெயர்தான் 'திராவிடன்' என்று கூறுவது சரியா ? தேசியவிநாயகம்பிள்ளை கம்பனை 'ஆரியம் நன்குணர்ந்தோன்' எனக் குறிப்பதற்கும், பாரதியார் 'இந்தியத் துணைக்கண்டத்தை ஆரிய நாடு எனக் குறிப்பதற்கும் பொருள் என்ன ? ஆரியன், பார்ப்பான் இவ் இரண்டும் ஒரே பொருளைக் குறிப்பனவா ? பாரதியார் தன் பாடல்களில் பார்ப்பானை இகழ்ந்தும், ஆரியனைப் போற்றியும் கவிதை புனையக் காரணம் என்ன ?

3. தென்குமரி வடமாலவன் குன்றம் இவற்றிடையே கிடப்பதுதான் தமிழ்நாடு என கூறுகிறார் பாரதியார். இதில் மாலவன் குன்றம் என்பது எந்த மலையைக் குறிக்கிறது. வேங்கடம் என்பதும் விந்தியம் என்பதும் ஒன்றா ? இதன் நிலப்பரப்பை விளக்குக ?

4. 'ஆயிரமாயிரம் தெய்வங்கள் உண்டெனும் அறிவிலிகாள்' என்று பாடிய பாரதியார், புராணங்கள் நல்கும் கதைகளையும், புனைந்துரைகளையும் மனதிற் கொண்டு, விநாயகர் நான்மணி மாலை, முருகா ! முருகா ! எனப் பக்திப் பாடல்கள் எழுதியதாகத் தென்படுகின்றதே ! இதன் கருத்து என்ன ? அவர் முருகனையும், விநாயகரையும் வழிபடுகின்றவரா ? அவரின் கவிதையின் பொருளைப்பற்றி உங்கள் கருத்து ?

1. மறவன் பாட்டுப் பல பிரதிகளில் காணப்படவில்லை. காணப்படும் பிரதிகளில் அடிகள், சீர்கள் விடப்பட்டுள்ளன. காரணம் தெரியவில்லை. ஒருவேளை படி எடுத்தோர் அவற்றை மிகக் கடுஞ் சொற்களாகக் கருதியிருக்கலாம். விளங்காமல் போயிருக்கலாம். ஏடு திண்ணப்பட்டுமிருக்கலாம். ஆனால் இவற்றை ஆராயாது கிடைப்பதைக் கொண்டு, அது காட்டும் பாரதியாரின் சாதி ஆணவக் கண்டிப்பை உணர்ந்தால் போதும். இவ்வுணர்ச்சியை மறைக்கவே விடுபட்ட சொற்கள் மறைக்கப்பட்டன என்றால், அது முற்றிலும் வெற்றி கண்ட ஒன்றல்ல. பாட்டே மறைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் விடுபடாத அடிகளும்; 'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே' என்ற சுதந்தரப்பள்ளு அடியும் அதனையடுத்த 'பரங்கியரைத்துரை என்ற காலமும் போச்சே' என்ற அடியும் கவிஞர் பாரதியார் சுரண்டல் எந்த வகையாயிருந்தாலும்கண்டிப்பவரே என்பதைத் தெள்ளத் தெளியக் காட்டுகின்றன.

விடுபட்ட அடிகளை நாமாகப் பூர்த்தி செய்யமுடியாதென்றில்லை. ஆனால் அந்த அளவுக்கு அது நம் பாட்டாகத்தான் இருக்கமுடியும். அது சரியுமல்ல, தேவையுமல்ல. விடுபட்ட பிரதிகள் கிடைத்தால், கிடைத்தவர் வெளியிடுவதே சரி. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களோ, வேறு யாரோ, விடுபடாத பாடல் அச்சிலேயே உள்ளதாகக் கூறியதாக நினைவு. அத்தகையோர் இதைப் பூர்த்திசெய்வதுடன் சான்றும் காட்டித் தெரிவித்தலே நலம்.

2. 'ஆரியன்' 'ஆரியம்' 'பார்ப்பனன்' என்ற சொற்கள் முற்றிலும் ஒரே பொருளில், எல்லாராலும் எல்லாக் காலத்திலும் பயன்படுத்தப்பட்டவல்ல. தற்காலத்திய ஆரிய இனக் கோட்பாடு வரலாற்று, மொழி, இன ஆராய்ச்சிகளின் பயனாக ஏற்பட்டது. இது இப்படியே பண்டைக் காலத்தில் இருந்திருக்கமுடியாது. ஆயினும் இன்றைய இனக் கோட்பாடு இன்றைய மொழி நாகரிகத் தொடர்புகளை விளக்குவது போலவே. பண்டை வழக்குகளையும் ஆதாரமாகக் காட்டுவதுடன், அவற்றின் வழக்குகளைப் பொருத்துக் காட்டி விளக்குகின்றன.

தூய தாய் இனத்தவரை இன்றைய மேலை அறிஞர் 'ஆரியர்' என்று பொதுச் சொல்லால் கூறினாலும், சரி நுட்பமாகக் கூறும்போது, 'இந்து-ஜெர்மானியர்' என்றே வழங்குவர். 'உர்-ஆரியர்' அதாவது ஆதி ஆரியர் என்றும் சிலர் குறிப்பதுண்டு. 'ஆரியர் என்ற சொல்லை அவர்கள் 'கிழை இந்து ஜெர்மானிய இனத்தவராகிய ஆசிய ஆரியரைமட்டுமே-பாரசிக, இந்திய ஆரிய முன்னோரைமட்டும் குறிக்க வழங்குவர்.

இந்திய வழக்கிலும், தமிழக வழக்கிலும் காலத்துக்குக் காலம் இச்சொல் அவ்வந் நாளில் தலை சிறந்து வழங்கிய ஆரிய நாட்டுப் பகுதி, ஆரிய திராவிடக் கலப்பு நாகரிகங்கள், ஆரிய திராவிடக் கலப்பு மொழிகளைக் குறிக்க வழங்கிற்று. சில சில காலங்களில் புத்தர் பிரானை, புத்தரைக் குறிக்கவும் இராமன் போன்ற தலைவரையோ, பிராமணரையோ குறிக்கவும் வழங்கியதுண்டு. எங்கும் 'ஆரிய' இனத் தொடர்பு இருந்ததென்பதில் ஐயமில்லை.

திராவிடம் என்ற சொல்லும் தமிழ் மொழியைமட்டும் குறிக்கவும், தமிழினக் குழுமொழிகளைக் குறிக்கவும், தென்னாட்டைக் குறிக்கவும் முன்பு வழங்கியதுண்டு. தென்னாட்டு மொழிகளத்தனையையும், அவற்றுடன் தொடர்புடைய வடதிசைப் பண்படா மொழிகளையும் அவற்றைப் பேசிய முன்னோரையும் குறிக்கும் இனப் பெயராக அதை முதன் முதலில் வழங்கியவர் நல்லாயர் கால்டுவெலே. ஆனால் இங்கும் 'ஆரியர்' என்ற இனப் பெயர்போல, புது இனப் பெயர் பழய வழக்குகளை மேற்கோளாகக் கொள்வதுடன் அவற்றுக்கு விளக்கம் தருபவையே

இவற்றின் விரிவு கேள்விப் பெட்டியில் பல கேள்விகளுக்கு விடையாக ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளது.

'திராவிடம்' ஆரியர்-வடநாட்டினர்-வழங்கிய தமிழினப் பெயர், ஆரியர் சூட்டிய பெயரல்ல. நேர் மாறாக, ஆரியர்க்கு அப்பெயர் தங்களால் தொடக்கத்திலிருந்தே சூட்டப்பட்ட பெயரல்ல. ஆரியர் வருமுன்னரே திராவிட நாகரிகம் பரவிய தொலை நாடுகளுள் ஒன்று நடு ஆசியாவிலுள்ள ஆரிய நாடு, அது 'ஆர்'-'ஓர்' கலப்பை நிறைவு, அழகு மேன்மை, என்றும் தமிழ்ப் பொருளுடைய சொல்லடியாகப் பிறந்தது. தென் ஆரிய மொழிகளில் ஒன்றுகிய இனத்தினத்திலும் 'ஆரா' கலப்பையே, எனவே ஆரியர் ஆரிய நாட்டுக்கு வந்த பின்னரே 'ஏரும் கலப்பையும் உழவும் கற்ற தமிழினத்தவராகிய ஆரிய நாட்டினரிடமிருந்து நாகரிகமும் அப்பெயரும் பெற்றனர்.

பார்ப்பனர் என்ற தமிழ்ச் சொல் ஆங்கிலச் சொல் முனிவும் ('Seer') போல ஆரியன்; புரோகிதனைக் குறித்த சொல். ஆரிய ஆதிக்கம் ஆரிய நாகரிகம் அல்லது ஆரிய நாகரிகச் சார்பு ஏற்ற புரோகிதர்களைப் பின்னால் குறித்து, இன்று அத்தகைய பிராமணரைக் குறித்த தமிழர் வழக்கமாகமட்டுமே வழங்குகிறது. பிராமணர் இன்று பார்ப்பனர் என்ற பெயரை விரும்புவதில்லை. தமிழ்ப் புரோகிதரைத் தமிழகத்திலும் எல்லாப் புரோகிதரையும் வடநாட்டிலும் குறிக்கும் பண்டாரம், பண்டிதர் போன்ற சொற்களையும் தமிழப் பிராமணர் இழிவாகவே கருதித் தமிழருக்கே உரியதாகக் கொள்கின்றனர்.

பிராமணரையே இழித்துக் கூறத்தான் பாரதியார் பார்ப்பான் என்ற சொல்லை வழங்கினர். 'ஆரிய நாடு' என்ற வழக்கு அவர் தமிழகத்தைப் புகழ்ந்து கூறிய சொல். அவர் ஆரிய நாகரிகம் உயர்ந்த நாகரிகம் பண்டைய ஆரியர் இக்காலப் பிராமணர் போன்றவரல்ல, உயர்பண்பு பேணியவர் என்றே நினைத்திருந்தார் என்பதில் ஐயமில்லை. ஆரிய சமாஜிகள் பண்டைய ஆரியருக்குச் சாதி வருண வெறி கிடையாது. இவை இடைக்காலப் பேடுகள் என்றே கொள்கின்றனர். இந்த அடிப்படையாகவே; வித வருண மூட நம்பிக்கையற்ற வள்ளுவரைத் தமிழர் உண்மையான திராவிடர் என்று போற்றுவதுபோலவே, ஆரிய சமாஜத்துத் தமிழர் சிலர் உண்மையான ஆரியர் என்று போற்றுகின்றனர்—'திருவள்ளுவர் ஓர் ஆரியர்' என்று சிற்றேடாக அவ்வாறும் விளக்கியும் உள்ளனர்.

3. 'மாலவன் குன்றம், என்று பாரதியார் கூறியது திருப்பதியையே—விந்தியம் என்று கூற எத்தகைய காரணமும் கிடையாது. கேள்வி கேட்பவர் அதை அவ்வாறு ஐயங்கொள்ள இடம் யாது என்று தெரியவில்லை.

4. இதுதான் இந்திய நாகரிகம் என்றும் இடைக்கால நச்சு பாம்பின் புதிர்—இந்து சமயம் என்றும் பெயராலும் அது இயங்குவதுண்டு. மூட நம்பிக்கைகளை, சாதி வருண முறைகளைக் கண்டிக்கும் வேதாந்திகளும், சித்தர்களும் இலக்கியத்தில் சமுதாயத்தில் வழங்கும கருத்துக்களை அப்படியே இலக்கிய ஆடையாக மேற்கொண்டனர். மேனாட்டில் மில்ட்டன் முதலிய கவிஞர்கள் கிரேக்க உரோம புராண கதைகளை கவிதை மரபாக மேற்கொண்டது போன்றதே இது. ஷெய்குத்தம்பி பாவலர்போன்ற தமிழ்ப் புலவர்களும் கவிஞர்களும் இராமாயண பாரதங்களை மேற்கொண்டது போன்று எழுதியதும் இங்ஙிலையே. ஆனால் இங்கெல்லாம் எழுதுபவர் சில சமயம் பேணுக்கள் சமய மரபு பேணுவாய் இருந்ததால் குழப்பம் ஏற்படவில்லை. இந்தியத் துணைக் கண்டத்திலோ இக்குழப்பம் மிகுதி.

இக்குழப்பத்தினால் விளையும் இடர் கண்ட முதல் இயக்கம் மறைமலையடிகளின் தனித் தமிழ் இயக்கமும் தென்கலைச் சைவ இயக்கமும் பெரியார் ஈ. வே. ரா அவர்களின் பகுத்தறிவு, தன்மான திராவிட இயக்கங்களுமேயாகும்.

— 8-ம் பக்கம் —

ஏஜண்டு தோழர்களுக்கு —

'தென்றல் பொங்கல் மலர்' தேவையான பிரதிகளுக்கு கமிஷன் அணு 8 நீக்கி பிரதி ஒன்றுக்கு ரூ 1-8-0 வீதம் பூராத் தொகையும் முன் பணமாக அனுப்பி வைக்க வேண்டும். முன் பணமின்றி கண்டிப்பாக மலர் அனுப்பி வைக்கப்படமாட்டாது. குறைந்த பிரதிகளே தயார் செய்கிறோம். தேவைக்கு முன் கூட்டியே தெரிவிக்கவும். மணியார்டர் கூப்பனில் "பொங்கல் மலருக்காக" என்று குறிப்பிட்டு எழுதுங்கள். தென்றல் பட்டியல் தொகையும் மலருக்கான தொகையும் சேர்த்து அனுப்பக்கூடாது.

நிர்வாகி,
தென்றல்.

அத்திப்பழம்

- 8 -

அந்த மாடியில் மூலைக்கு ஒன்றாக இரண்டு அறைகள் மட்டுமே இருந்தன. மற்ற பகுதி வெற்றிடமாக ஏதாவது உலர்த்துவதற்கு என்று கட்டும்போதே விடப்பட்டதாகும். வீடும் பணம் தேடித்தரும் நிலையில் இருக்கும் சென்னைப்பட்டினமாக இருந்தால் அந்த இடத்திலும் மேலே கூறையைப் போட்டு வாடகைக்கு விட்டிருப்பார். ஆனால் கிராமத்தில் வீடுகள் குடியிருப்பதற்குமட்டும் என்று இல்லை. விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் குடும்பங்களுக்கு பாதி வேலை வீட்டிலேயே நடைபெற்றாக வேண்டும். அதனால்தான் பெரியசாமி வீட்டைக் கட்டும்போதே விதை நெல் உலர்த்த, நார் உரித்தால் அதை காற்றாட வைக்க என்று பெரும் பகுதியான இடத்தை வெற்றிடமாக வைத்திருந்தார். மேலே இருந்த இரண்டு அறைகளில் ஒன்றில் ஏதாவது பழஞ் சாமான்கள் அடைத்துக்கொண்டிருந்தன. மற்றொரு அறை ஞானசம்பந்தனுக்கென்றே விடப்பட்டிருந்தது.

எப்போதாவது விதை நெல் அளவுக்குமேல் விட்டிருந்தால் அதை உலர்த்தி எடுக்கும்வரை இரண்டு மூன்று நாட்கள் அந்த அறையில் போட்டு வைப்பார்கள். சிவகாமியம்மாள் ஊறுகாயை உலர்த்தினாலும், அந்த ஊறுகாய் உலர்ந்து ஓடாகப் போகின்றவரை அந்த அறையில்தான் வைத்திருப்பது வழக்கம். வேறு எதற்கும் பயன்படுத்துவதில்லை.

உணவு உட்கொண்டு மாடிக்குச் சென்ற ஞானசம்பந்தன் கட்டிலில் படிந்திருந்த தூசியைத் தட்டிவிட்டு தலையணையை எடுத்து மாற்றிப் போட்டுக்கொண்டு படுத்தான். காலதர் வழியாக பரந்திருந்த வயல் வெளியைக் கண்டான். தொலைவில் தெரிந்த ஏரிக்கரையில் வரிசையாக நின்றிருந்த பனைமரங்களைக் கண்டான். இளவயதில் அங்கெல்லாம் ஓடி அடித் திரிந்த நாட்கள் அவன் நினைவில் வந்து வந்து போயின.

எழிலனுடன் எத்துணையோகள் அந்த ஏரிக்கரையில் இருந்த மதகின் கைப்பிடி சுவரின்மீது உட்கார்ந்து கால்களைத் தண்ணீரில் நனைத்தவாறு பேசிக் கிடந்தான். வேடிக்கையாக மதகுக் கட்டையை மூடிவிட்டுப் பிறகு அதை வெளியே எடுக்க இயலாமல் திண்டாடியிருக்கின்றான். வீட்டுக்குத் தெரியாமல் வேர்க்கடலையை எடுத்துச் சென்று, காய்ந்த சுள்ளிகளையும், சருகுகளையும் போட்டுக் கொளுத்தி கருகிப் போன கடலையை எடுத்துத் தின்று 'சுவை சுவை' என்று இருவரும் நாவை சப்புக் கொட்டியிருக்கின்றனர். அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் ஞானசம்பந்தன் நினைவுக்கு வந்தபோது எப்போதோ நடைபெற்று இனி தன் வாழ்க்கையில் மறுபடியும் நடைபெற இயலாத நிகழ்ச்சிகளைப்போன்ற உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு. இவ்வாறு பழங்கணக்குகளைப்பார்த்தவாறு நெடு நேரம் நினைப்பை அலையவிட்டுக் கொண்டிருந்தவன் திடும் என நாளைக்கு சென்னைக்குப் போக வேண்டுமே என்று எண்ணினான்.

சென்னைக்குப் போவதில் ஒன்றும் புதுமை இல்லை, சிறப்பும் இல்லை. ஆனால் ஞானசம்பந்தன் நாளை போகின்றபோது வெறுங்கையனாய்ப் போய் கல்லூரிக்குள் நுழைய இயலாது. நாளை மறு நாள் காலாண்டுத்தேர்வுகள் தொடங்க இருந்தன. அந்தத் தேர்வுக்குமுன் எல்லோரும் நிலுவையில்லாத வகையில் சம்பளம் கட்டிவிட வேண்டும் என்று கல்லூரித் தலைவர் சுற்றறிக்கை அனுப்பியிருந்தார்.

கல்லூரித் தலைவரின் அறிக்கையில் கண்டிப்பு இருந்தது. தவறுகின்றவர்களுக்குத் தண்டனை பெயர்ப்பட்டியலிலிருந்து பெயரையே நீக்கிவிடுவதாக வேறு அச்சுறுத்தி இருந்தார். ஞானசம்பந்தனைக் கல்லூரியில் சேர்த்தபோது பெரியசாமி ஒரு பாதித் தொகையைக் கட்டிவிட்டு மறு பாதியை பிறகு கட்டலாம், அதற்கு இன்னும் இரு திங்கள் கால எல்லை இருக்கிறது எனக் கேட்டுக்கொண்டுதான் மாத்தூருக்கு வந்தார்.

வந்தபின் மகன் செலவுக்கு என்று ஐம்பதும் அறுபதும் கேட்டு எழுதியபோதெல்லாம் அனுப்பியதோடு ஒருமுறை முன்னே கட்டாமல் விட்ட மறுபாதி சம்பளத் தொகையையும் அனுப்பிவிட்டார். ஆனால் அந்த மகனோ எங்கோ நெடுந்தொலைவில் இருக்கும் தந்தைக்குத் தெரியவா போகின்றது என்று துணிந்து வந்த பணத்தையெல்லாம் வரவுக் கணக்கில் எழுதி தன் செலவுக் கணக்கைப் பெருக்கிக்கொண்டான்.

'கல்லூரிக்கு 'மெதுவாக' கட்டிக்கொண்டால் போயிற்று என்று எண்ணினான். இவன் எண்ணத்தை உறுதிப்படுத்தி வழிவகை சொல்லிக் கொடுக்க ஏகாம்பரத்தின் மூளை பயன்பட்டது.

'அடே ஞானசம்பந்தா - கல்லூரிக்கு இப்போது ஒன்றும் குடிமுழுகிப் போகவில்லை. 'மெதுவாகக் கட்டிக்கொள்ளலாம். எடு அந்தத் தொகையை' என்று தூண்டிவிட்டான். அவனுடைய தூண்டுதல் ஞானசம்பந்தனின் துணிவுக்கு உணவாயிற்று. தனக்கு வந்த பணத்தோடு கல்லூரிக் கட்டணமாக அனுப்பியதையும் கரைத்தான். எப்படியாவது பிறகு கட்டிவிடலாம் என்று துணிந்துவிட்டான்.

ஆனால் எப்படியாவது என்று செலவு செய்திட்டபோது நினைத்தானே தவிர அந்த 'எப்படியாவது' எப்படி என்று அவனுக்குத் தெரியாமல் போயிற்று. என்னென்னவோ முறைகளை எண்ணினான் ஆனால் எந்த முறையும் பலன் தரும் முறையாக இல்லை. யாரை யாரையோ கடனும் கேட்டான். இரண்டொருவர் இல்லை என்றனர் இன்னுஞ் சிலர் இல்லை என்பதைச் சொல்லால் சொல்லாமல் குறிப்பால் உணர்த்தினர். சிலர் குறிப்பை கோபமாக்கினர், கோபம் சண்டையாக மாறிவிடப் போகின்றதே என்று அஞ்சி சில இடங்களில் இவனைக் கேட்கவில்லை.

'மெதுவாக'க் கட்டிவிடலாம் என்று தூண்டுதல் தந்த ஏகாம்பரம் எங்கோ போய் ஒளிந்துகொண்டான்.

நிலுவைத் தொகைகளுக்கு நாளை கடைசி நாள்' என்ற அறிக்கையைக் கண்டதும்தான் ஞானசம்பந்தன் நிலைமையை நன்கு உணர்ந்தான்.

கனவு கண்டுகொண்டிருக்கும் போது நாம் அலைகடலின்மீது ஆடி அசைந்து செல்லும் கலத்தின் தலைவனாக இருக்கின்றோம், வான வெளியில் முகிலைக் கிழித்துச் செல்லும் விமானத்தின் கதியைத் தீர்மானிக்கின்றோம், அரண்மனையின் திறவுகோல் நம் உள்ளங்கையில் இருக்கிறது, ஆனால் கனவு கலைந்திடும் என விழித்துப் பார்த்திடும்போது வெறும் பாயிலிருந்து வெற்றிடத்தில் உருண்டு விழுந்து கிடக்கின்றோம்.

அதைப்போலத்தான் ஞானசம்பந்தன் மாத்தூரிலிருந்து கல்லூரிக்கு வந்தபின் எங்கோ அலைந்தான், கனவுலகில் காடு மேடெல்லாஞ் சுற்றினான். கனவு கலைந்து நினைவு தோன்றிடும் போது நிலைமை விளங்குவதைப் போல தேர்வு நெருங்கியதும் இவனுடைய நிலைமை என்பதனைத் தெளிந்தான். திண்டாடினான்.

வேறு புகல் இல்லை என்பதனை எண்ணியபோதுதான் அவனுக்குச் சிவகாமி அம்மாளின் நினைவு வந்தது. எவ்வளவு பெரிய பிழை செய்தபோதும் அந்தத் தாயின் கரங்கள் தன்னை அணைத்து ஆதரித்ததை அவன் நினைந்தபோது நெஞ்சம் கலங்கினான். எங்கோ ஒரு மூலையில் தன் நினைவால் நெடுமூச்செறிந்து கிடக்கும் அந்த அம்மாளை - தன் தாயை - நினைத்தான்.

மறுநாள் மாத்தூருக்கு வந்துவிட்டான். குறை சொல்லி அழுதான். 'இதோ இன்னும் ஒன்று' என்று சொல்லிச் சொல்லி மகனுடைய வயிற்றை நிரப்பிய சிவகாமி அம்மாளிடம் அவன் தான் வந்த காரணத்தை விளக்கியபோது அந்தத்தாயின் மனம் கலங்கியது. ஆனால் மறுகணம் மனத்தைத் தேற்றிக்கொண்டு 'ஆகட்டுமடா' என்று ஆறுதல் சொல்லிவிட்டார்கள்.

அந்தத் துணிவில்தான் ஞானசம்பந்தன் காலையில் போகும்போது அம்மா கொடுப்பார்கள் பணம் என்று நிம்மதியாக உறங்கத் தொடங்கினான்.

செய்ததையும் செய்துவிட்டு அவன் நிம்மதியாக மாடி அறையில் கட்டிலின்மீது உறங்கி

மா.கி. தசரதன் எம்.ஏ.

கிடந்தான். ஆனல் கிழே சிவகாமியம்மாள் நெஞ்சம் புழுங்கிக் கிடந்தார்கள்.

நெடு நாட்களுக்குப் பின் வந்த மகனை அன்போடு வரவேற்று ஆர்வமோடு உண்பித்து ஆசையோடு பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அகம் குழைந்து பேசிய நேரமாக பார்த்து ஞானசம்பந்தன் தான் வந்த சேதியைச் சொன்னன்.

"அம்மா..."

"என்ன சம்பந்தா?"

"நாளைக் காலையில்..."

"காலையிலேயே போகணுமா?"

"ஆமாம்'மா. போகும் போது..."

"போகும்போது?..."

"சம்பளம்..."

"இன்னுமா கொடுக்கவில்லை உன் அப்பா. அவர் எப்போதுமே இப்படித்தான்."

"இல்லை'மா. அவர் கொடுத்து விட்டார்.

"பின்?"

"அது...ஊம்...செலவு..."

"அவ்வளவுமா?"

"......"

"எப்போது கட்டணும்?"

"நாளைக்குத்தான்'மா கடைசி நாள்."

"என்னடா செய்வேன் நான்? முன்னே ஐம்பது அனுப்பச் சொன்னபோது அவர் துள்ளிக் குதித்தார். இப்போது நீ அனுப்பிய பணத்தைத் தொலைத்து விட்டு வந்து நிற்கின்றயே" என்றுதான் முதலில் சொன்னர்கள். ஆனல் ஞானசம்பந்தனின் கலங்கிய கண்களைக் கண்டதும் அந்த அம்மாளின் ஈரநெஞ்சம் இளகிவிட்டது.

"சரி. சம்பந்தா நாளை தருகின்றேன் கட்டிவிடு" என்று ஆறுதல் சொல்லிவிட்டார்கள்.

'நான் தருகின்றேன்' என்று சொல்லிவிட்டார்களே தவிர அந்த அம்மாளிடம் அவ்வளவு பெரிய தொகை இல்லை.

சில குடும்பங்களில் கணவனுக்குத் தெரியாமல் மனைவி பணம் சேர்த்துச் 'சிறுவாடு' சேர்த்து வைக்கின்றர்கள். கணவன் வாங்கிவரும் வீட்டுச் சாமான்களில், அரிசியில் அதில் இதில் கொஞ்சம் எடுத்து அக்கம்பக்கத்தில்இருப்பவர்களுக்கு விற்றுவிட்டு, சில்லரையை முடிந்து கொள்ளும் மனம் எல்லோருக்கும் வருவதில்லை. சிவகாமி அம்மாளிடம் அந்தத் திறமை என்றுமே இருந்ததில்லை. அந்த வீட்டில் நுழைந்ததிலிருந்து எது வேண்டுமானலும் கணவனைக் கேட்டுப் பெறவேண்டும் என்று தான் பழக்கப்படுத்திக் கொண்டார்கள். அப்படிக் கணவன் கொடுத்த பணத்தில் பத்தோ இருபதோதான் அந்த அம்மாளிடம் இருந்தது.

ஆனலும் எப்படியாவது பெரியசாமியிடம் சொல்லி நாளை கொடுத்தனுப்பிவிடலாம் என்ற துணிவில் 'நாளை தருகின்றேன்' என்று சொல்லிவிட்டார்கள்.

பெரியசாமியிடம் எதை எப்படி எப்போது கேட்டுப் பெறவேண்டும் என்பதை சிவகாமி அம்மாள் ஒரு கலையாகவே பயின்று வைத்திருந்தார்கள். பெரியசாமி கோபமாக இருக்கின்ற நேரத்தில் எதிர்ப்பேச்சு பேசாமல் வாய் மூடிக் கிடப்பார்கள்.

"வாயில் என்ன கொழுக்கட்டையா? இவ்வளவு நேரமாகக் கத்துகிறேனே காதில் விழவில்லையா. ஊமையா?" என்றெல்லாம்கூட பெரியசாமியின் கோபம் சொற்களை கொட்டும்.

ஆனல் சிவகாமி அம்மாளோ வாயைத் திறவாமல் அடங்கிக் கிடந்திட்டு, வந்த கோபம் போய் விட்டது என்பதைத் தெரிந்து கொண்டதும் வம்புக்குப் போய் நிற்பது உண்டு. அப்போது பெரியசாமியால் கோபப்பட முடியாது. குழைவு தான் வரும். அந்த நேரத்தில் தான் சிவகாமியம்மாள் தான் வேண்டிய 'வரங்களை' வாங்கிக்கொள்வது.

அன்றும் அப்படித்தான்,

முன்னே அனுப்பிய கல்லூரிக் கட்டணத்தை ஞானசம்பந்தன் செலவு செய்துவிட்டான். நாளை அதை வாங்கிக்கொண்டுபோகத் தான் வந்திருக்கின்றன் என்பதைக் கேட்டதும் பெரியசாமியின் கோபம் என்றுமில்லாத அளவுக்குப் போய்விட்டது.

தலையைக் கவிழ்ந்துகொண்டு மகன் வெளியே போனதும் 'சிவகாமி' என்று அழைத்துக் கொண்டே உள்ளே போன பெரியசாமி மெல்ல பேச்சு தொடுத்து ஞானசம்பந்தனைப் பற்றிக் கேட்க தொடங்கினர்.

'என்ன சிவகாமி, உன் மகன் வந்தானே என்ன சொன்னன்?"

"அதென்ன என் மகன்?"

"உனக்குத் தானே அவன் 'செல்லம்'?"

"ஆமாம். உங்களுக்கில்லை!"

"என்ன சொன்னன் என்று கேட்டேன் சொல்லவே யில்லையே நீ."

"என்னவோ சொன்னன்."

"சொல்லேன் கேட்போம்."

"ஏதோ சொன்னன்..."

"சரி, என்ன கொண்டு வந்தான். பட்டணத்திலிருந்து வந்தானே என்ன வாங்கி வந்தான்"

"ஆமாம் குழந்தைக்கு நாம் வாங்கிக் கொடுக்க வேண்டுமா—குழந்தை நமக்கு வாங்கி வர வேண்டுமா"

"என்ன சிவகாமி- குழந்தையா-யார் ஞானசம்பந்தன?"

"பின்னே என்னவாம்?"

"ஆமாம். திருமணம் ஆகப் போகின்ற குழந்தை-" என்று சொல்லிவிட்டு பெரியசாமி சிரித்தார்.

மறுபடியும் பேச்சைத் தொடரும் நோக்கத்தோடு.

"என்ன வாங்கி வந்தான் என்று கேட்டேனே" என்றர்.

"அவனிடம் ஏது பணம், உங்களுக்கு ஓமப்பொடி பொட்டலம் வாங்கி வர' என்றர் சிவகாமியம்மாள்.

"என்னது ஏது பணமா? போன வாரம்கூட இருபது ரூபாய் அனுப்பினேனே"

"எப்படி அனுப்பிவிட்டீர்களோ இருபது ரூபாய்?"

"உனக்கென்ன சொல்வதற்கு எனக்கல்லவா தெரியும் அந்த இருபது ரூபாய் எப்பாடுபட்டால் கிடைக்கிறதென்று?"

"எல்லோருக்குந்தான் பாடு பட்டபின் பணமும் பலனும் கிடைக்கிறது, உங்களுக்குமட்டும்தான?" என்று சிவகாமியம்மாள் ஏதோ ஒரு அரிய செய்தியைச் சொன்ன மகிழ்ச்சியை அடைந்தார்கள்.

"ஆமாம். என்னதான் செய்தான். அந்தப் பணத்தை?" என்று பெரியசாமி குரலில் கொஞ்சம் குழைவை வரவழைத்துக்கொண்டு கேட்டார்.

பேதை சிவகாமியம்மாள் எப்படியாவது செய்தியைச் சொல்லி பணம் வாங்க வேண்டுமே என்ற கவலையில் அந்தக் குழைவு உண்மை என்று நம்பி தன் மகனைப்பற்றிய செய்திகளை எல்லாம் சொல்லிவிட்டார்கள்.

'நாளை கல்லூரிக் கட்டணம் வாங்கிச் செல்லத்தான் வந்திருக்கின்றன் என்பதை அறிந்ததும் பெரியசாமியின் மனம் ஒரு நிலையில் இல்லை. குழைவு எங்கோ போய் மறைந்தது; கோபம் எங்கிருந்தோ வந்து நிறைந்தது.

"என்ன செய்தாலும் அவ்வளவு பணத்தையும். இங்கே என்ன செடியிலா காய்க்கிறது? இல்லை கொட்டிக் கிடக்கிறதா-கேள்வியே கிடையாதா? எல்லாம் நீ கொடுக்கிற இடம்; கல்லூரியும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்" என்று தன் ஆத்திரத்தை எல்லாம் கொட்டிவிட்டார்.

மெல்ல மெல்ல சிவகாமியம்மாள் நிலைமையை விளக்கிச் சொல்லி பெரியசாமியை சமாதானப்படுத்தினர்கள்.

"என்ன செய்வது நாம் பெற்ற பிள்ளை- நம்முடைய விரல் கண்ணைக் குத்தினல் அதற்காக விரலையே வெட்டிவிடுவதா? எப்படியோ கொடுத்தனுப்ப வேண்டியதுதான். கல்லூரியில் கொண்டு போய் விட்டுவிட்டீர்கள். இனி நிறுத்துவது என்றல் நாலு பேர் நாலு பேசுவார்கள்" என்று சிவகாமியம்மாள் பலவாறு எடுத்துச் சொல்லி பெரியசாமியின் மனதில் இருந்த ஆத்திரத்தைப் போக்கினர்கள்.

எழிலனுடன் எதை எதையோ பேசிவிட்டு வந்த ஞானசம்பந்தன் ஒன்றுமறியாமல் மாடியில் கட்டிலில் உறங்கிக் கிடந்தான்.

பிள்ளையின் நிம்மதிக்குப் பெற்றவர்களுக்குள் போராட்டமே நடந்தது அந்த வீட்டில்.

(தொடரும்)

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

இந்த ஆண்டு "தென்றல்" பொங்கல் மலர் சிறப்பாக வெளிவர இருக்கிறது.

மலர் தேவையுள்ளோர் முன் கூட்டியே ரூ 2 அனுப்பிவிட வேண்டும்.

மலருக்குப் பணம் அனுப்பும் பொழுது உங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட மறவாதீர்கள்.

நிர்வாகி
"தென்றல்"

கதி. இராமனுதன்

தென்றல்-விளம்பர நிர்வாகி கதி. இராமனுதன் அவர்கள், பொங்கல் மலருக்காக விளம்பரம் சேகரிக்க, கடந்த 29-ம் தேதியன்று சுற்றுப்பயணத்தைத் தொடங்கியிருக்கிறர். தென்றல் வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட தோழர்களும், வணிகப் பெருமக்களும் இயன்றஅளவு விளம்பரம் சேகரித்துக் கொடுத்து அவரோடு ஒத்துழைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

—கண்ணதாசன்

காமம் நிறைய வரின்...!

தலைவியினுடைய வீட்டுக்கும் அந்தப் பூங்காவுக்கும் அதிக தூரமில்லை. அந்தப் பூங்காவில் தான் தலைவன் வந்து சந்திப்பதாகச் சொல்லியிருந்தான் தலைவி பூங்காவிற்குள் நுழைந்தாள். பூங்காவானது செடிகளும் கொடிகளும் அடர்ந்து வெகு கவர்ச்சியாக அமைந்திருந்தது. பூத்துக் குலுங்கும் அப்பூங்காவின் இடையிலே ஒரு அழகிய குளம் இருந்தது. அது பெண்ணைப் பறையின் கரிய கண்ணைப்போல வட்ட வடிவமாக அமைந்து அழகாகக் காணப்பட்டது.

தலைவன் இன்னும் வரவில்லை. தலைவி குளத்தை அண்மினாள். பெண்களின் அழகிய முகங்கள் போலவும் கண்களைப் போலவும் ஏராளமானத் தாமரை மலர்களும் குவளை மலர்களும் பூத்திருந்தன. போதாக்குறைக்கு அப்பெண்களின் கண்கள் பிறழ்வதைப் போன்று சென்டை மீன்கள் பிறழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தன.

குளத்தில் இறங்கிய தலைவி தாமரைப்பூ ஒன்றைப் பறித்தாள். தலைவன் அருகாமையில் இல்லாதபோது அவளது உறுப்புக்கள் எல்லாம் குறைவுடையதாகவே அவளுக்குப் பட்டன. தாமரையின் அலர்ச்சியால்அழகு மிக்க தன்னுடைய முகம் அழகிழந்து இருப்பதாக அவள் எண்ணினாள். அவளுக்குத் தாமரைப்பூவின்மீதே பொறாமை ஏற்பட்டது. என் முகத்தின் அழகைக் கெடுக்கும் பகையாவாய் நீ என்று கோபித்துக் கொண்டாள். பகையைப் பேணுபவள் நானல்ல என்று கூறுவாள் போன்று மலரை நீரில் விட்டெறிந்தாள்.

குவளையைப் பறித்தபோதும் அவளுக்கு இதே உணர்ச்சிதான் தோன்றியது. தன்னுடைய கண்ணின் அழகைக் கீழ்ப்படுத்திவிட்டதாகக் குவளையை குற்றம் சாட்டினாள். தாமரையின் கதியை நீயும் பெறுவாய் என்று அதையும் குளத்தில் விட்டெறிந்துவிட்டு கரையேறினாள்!

கரையில் பூத்துக்கிடந்த காந்தள் மொட்டுக்களைப் பறித்தாள். அவளுக்கு அடங்காக் கோபம் தான் ஏற்பட்டது. தன்னுடைய கரங்களையே பழிக்கும் இந்த மொட்டுக்களுக்கு எவ்வளவு திமிர் இருக்கவேண்டும் என்று எண்ணினாள். அடுத்த கணம் அதையும் விட்டெறிந்தாள் நிலத்தில்!

நடந்துசென்றாள் மெதுவாக. தென்றல் வீசியது. முல்லைக் கொடிகளில் இருந்த மலர்கள் சில உதிர்ந்தன. அவைகள் தமது ஏமாற்றத்தைக் கண்டு சிரிப்பதாக அவளுக்குப் பட்டது. அங்கிருந்து பெயர்ந்து சென்றாள்.

தலைவியைக் காணவேண்டி தலைவன் வந்தான். குளத்தின் ஓரமாக வந்துகொண்டிருந்த அவன் 'சலக்' என்ற சப்தம் கேட்டு, குளத்தைப் பார்த்தான். 'நம் தலைவி நீரில் குளித்துக் கொண்டிருக்கின்றாள்; முகம் மட்டும் தெரிகின்றது; உடல் முழுதும் நீருக்குள் மறைந்து கிடக்க வேண்டும்' என்று எண்ணி நெருங்கினான். அங்கே தலைவி இருக்கவில்லை! அவள் பறித்துப் போட்டிருந்த செந்தாமரை மலர்தான் இருந்தது! பாவம்! ஏமாற்றத்துடன் அதை எடுத்துக்கொண்டான்.

கரையேறுமுன் நீர்ப்பரப்பை ஒருமுறை பார்த்தான். கண்களிரண்டு நீருக்குள் மூழ்கிக் கிடப்பதைக் கண்டுவிட்டான். ஆர்வத்தோடு தழுவினான். குவளை மலர்கள் தான் கிடைத்தன!

அவனது ஏமாற்றத்தைக் கண்டு சிரிப்பார்போல பின்னிருந்து குரல் ஒன்று கேட்டது. திரும்பிப் பார்த்தான். அங்கு யாருமில்லை. 'தலைவியின் குரலாகத்தான் இருக்கவேண்டும்; அவள் இங்குதான் எங்கோ மறைந்து கொண்டிருக்கிறாள்' என்று மலர்களோடு கரையேறினான். தேடிப் பார்த்ததில் தலைவியைக் காணோம். அசோகமரத்திலிருந்த கிளிதான் பறந்து சென்றது!

செறிந்த மலர்ப்புதரில் ஒரு உருவம் சென்று மறைவதைக் கண்டான். 'அதோ தலைவி' என்று சென்றான். மயிலொன்று ஓடி மறைவதைத்தான் காண முடிந்தது!

அங்கிருந்து சற்றுத் தொலைவில் வேறோர் காட்சியைக் கண்டு மகிழ்ந்தான். 'ஆம், உண்மை; அது தலைமகளின் இடைதான்; குனிந்துகொண்டு ஏதோ செய்கின்றாள்' என்று எண்ணி விரைந்தான். என்ன ஏமாற்றம், முல்லைக்கொடிதான் வளைந்து படர்ந்துகிடந்தது!

வேறோர் பக்கம் திரும்பி நின்றான். ஒரு புதரின் இடையில் இரண்டு கண்கள் மட்டும் தென்பட்டன. 'இனி ஐயமில்லை; தலைவி மறைந்துகொண்டிருக்கும் இடம் அதுவேதான்' என்று விரைந்தான். குட்டிக்குப் பாலூட்டிக்கொண்டிருந்த மான் மருண்டு ஓடியது! குட்டியும் பின் தொடர்ந்தது! பெருமூச்சு விட்டான்! தலைவியைக் காணமுடியும் என்ற நம்பிக்கை மட்டும் தீர்ந்தபாடில்லை.

மற்றோர் பக்கம் பார்த்ததில் தலைவியின் தோளும் விரல்களும் ஒரு புதருகிடையில் தென்பட்டன. 'தலைவியைக் கண்டு பிடித்து விட்டோம்' என்ற மகிழ்ச்சியோடு விரைந்தான்.

மீண்டும் ஒரு ஏமாற்றம்! மூங்கிலும் அதனையொட்டி அரும்பியிருந்த காந்தள் மொட்டும்தான் அங்கிருந்தவை!

வருத்தத்தோடு அமர்ந்துவிட்டான். தன்னை நோக்கி வந்துகொண்டிருக்கும் தலைவியைக் கண்டான். இப்பொழுது ஏமாற்றமில்லை! மழையைக் கண்ட அசுணமாய் மகிழ்ந்து நெருங்கினான்! அவளும் இளஞாயிற்றைக் கண்ட வளவிய தாமரையானாள்!

தன்னுடைய கையில் இருந்த மலர்களைப் பார்த்தான். அவைகள் தம்மை ஏமாற்றியதை நினைத்தான். தலைவியை நோக்கிக் கூறினான்.

"அன்பே! அருந்தமிழே! என் ஆருயிரைக் காக்கவந்த பெருமருந்தே! இந்தத் தாமரை மலரைப் பார்த்தாயா? குளத்தில் இருந்தபோது இது எவ்வளவு அழகாக இருந்தது தெரியுமா? அந்தோ, பாவம்! உன் முகத்தைக் கண்டதும் நாணமுற்று தன் அழகையெல்லாம் இழந்து வாடிவிட்டதே!

"இதோ, இந்தக் குவளைகளும் அப்படித்தான் உனது கண்களின் ஒளிபட்டதும் கலக்கம்கொண்டு நடுநடுங்கி தனது எழிலெல்லாம் இழந்து உன்பால் அடைக்கலம் வேண்டி இரக்கின்றனவே! அறிவாயா? ஏற்றுக் கொள்!

காந்தள் மொட்டு அலர்ந்து விரிந்திருக்கக் கண்டான்.

"இதோ, இவைகளும் அப்படித்தான்! உனது விரலின் எழிலோடு போட்டியிட முடியாமல் போட்டி நிலையாகிய மொட்டினின்றும் நீங்கி மலர்ந்து பின் வாங்கிவிட்டன!"

இவற்றைக் கூறிமுடித்தவுடன் அவனுக்கு வஞ்சம் தீர்த்துக் கொண்ட மகிழ்ச்சி ஏற்பட்டது. தலைவி, தலைவன் அருகாமையில் இருக்கும்போது தனது உறுப்புக்கள் ஒளிபெற்று விளங்குவதைக் கண்டாள். தலைவன் சொன்னவை உண்மைதான் என்று நம்பினாள்! நாமும் அப்படித்தானே!

—மொழியன்பன்

★ ★ ★

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

தே. இலக்கியப் பித்தன் தாழையூத்து.

1. திருக்குறளில் ஈகை அதிகாரத்தில் அதாவது 226-வது குறளை அலகிட்டால் பிழை வருகிறதே, ஏன்? விளக்கக் கோருகிறேன்.

அற்றார் அழிபசி தீர்த்தல், அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

குறள். 226

2. மொழிக்கு முதலில் குற்றியலுகரம் வருமாமே அது எது? விளக்கமாய் தாருங்கள்.

1. 'தீர்த்தல்' (முதலடி 3-ம் சீர்) நேர் நேர், தேமா' வாய்ப்பாடு. அடுத்த சீர், 'அஃதொருவன்' நேர் நிரை நேர் 'கூவிளங்காய்' வாய்ப்பாடு. மாமுன் நிரை வரவேண்டும். நேர் வந்திருக்கிறது. கேள்வியாளர் அலகிட்டில் கண்ட முரண்பாடு முரண்பாடுதான். ஆனால் ஒலிப்பில் அஃதொருவன் எனபது அஃஃதொருவர் போல மாத்திரையிடுவது காணலாம். அது அளபெடையாகவும் இருந்திருக்கலாம். அதை அளபெடையாகக்கொண்டு 'நிரை' யாக்கிக்கொள்ளலாம்; அல்லது, ஒலிப்பு நீடல் காரணமான அருகலான விதிவிலக்காகக் கொள்ளலாம். நளவெண்பாவிலும் அருகலாக ஒலி குறைப்பால் இடை எழுத்துக்கள் அலகு கெட்டு இரு நேர் நிரையாவதுண்டு.

2. **'குற்றியல் உகரம்**
முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை
நகரமொடு தோன்றும்'

(தொல்காப்பியம் சூத். 67)

இவ் விதிப்படி 'நுந்தை' (நும்—தந்தை) என்ற முறைப் பெயரில் இரண்டு நகரத்துக்கும் இடைப்பட்ட உகரம் குற்றியலுகரமாக முதற்கண் வந்தது என்பர் தொல்காப்பியர். நன்னூல் முதலிய பிற்கால இலக்கணங்களில் இவ்விதி கிடையாது.

தொல்காப்பியர் கால உச்சரிப்புக்களை நாம் இன்று முற்றிலும் காணக்கூடவில்லை. ஆனால் குற்றியலுகரம் படையில் மொழி பேசுவோரிடையே பெரும் குளறுபடி அன்றிருந்தே ஏற்பட்டுவிட்டது. நுந்தை நெடுங்காலத்துக்கு முன்பே குற்றியலுகரமாக சேர்க்கப்படாமல் முற்றியலுகரமாகவே ஒலிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. அத்துடன் ஈற்றில் ஒருவேளை தொல்காப்பியர் காலத்திலே கூட, ஆனால் கட்டாயமாகப் பின்னாட்களில் குற்றியலுகரமும் முற்றியலுகரமும் ஒருப் போலவே உச்சரிக்கப்பட்டு வருகின்றன. உண்மையில் புணரியலுக்காகவே தனியாகக் குற்றியலுகரம் புணரியல் தொல்காப்பியத்தில் வகுக்கப்பட்டிருப்பினும், இரண்டு உகரங்களிடையிலும் புணரியலில் மிகுதி வேறுபாடு காணமுடியாது. உகரத்தைத் தொல்காப்பியர் காலத்திலிருந்து இன்றுவரை குற்றியலுகரம் முற்றியலுகரம் என்று பிரித்ததைவிட, இடவேற்றுமையால் தனிக்குறி வகுத்த ஈற்று உகரம் பிற எழுத்தடுத்த ஈற்றுகரம் என்று பிரித்திருந்தால் பொருத்தமாயிருக்கும் என்பர் பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார் அவர்கள். அது பொருத்தமே எனல் வேண்டும்.

— 4ம் பக்கத் தொடர்ச்சி —

"அதுதான் கூறினேனேஅவர் கழனிக்குச் சென்றுள்ளார் என்று"

"கழனிக்கு எதுக்கம்மா?"

மூவேந்தர் கண்களும் சந்தித்தன. நகைப்பிற்கேற்ற விஷயம் கிடைத்துவிட்டது. என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர். ஏகம்பவாணனின் புகழைக் கேட்டு மனம் நொந்து போய்த்தான் மூவரும் ஓடி வந்தனர். அவனை எங்ஙனமேனும் இழிவு படுத்த வேண்டும் என்பதுதான் அவர்கள் திட்டம்.

"கழனி செல்லக் காரணம் என்ன அம்மையிர்?"

மிக மிக மரியாதையுடன்எழுந்தன சொற்றொடர்கள்.

கழனி செல்லக் காரணம் என்னவா?...அவ்வாருயின் இவர்கள் இதுவரை கழனி சென்றதேயில்லைபோலும் என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்ட மெல்லியின் முகத்தில் மென்னகை அரும்பிற்று.

"இப்பொழுது நாற்று நடவு காலமல்லவா? அவரும் நடப் போயிருக்கின்றார்"

சேரன் சோழனைப் பார்த்தான். சோழன் பாண்டியன் பக்கம் திரும்பினான்.

"அவர் நடப் போயிருக்கின்றாராமே"—சேரன்.

"அதுவும் முடி நடப் போயிருக்கின்றாராமே"—சோழன்.

"ஏன் அம்மா. முடி நடவா போயிருக்கின்றார் தங்கள் கணவர்...அவர்கள் குரலில் தொனித்த ஏளனத்தை மெல்லி புரிந்துகொண்டாள். அவள் முகம் செந்நிறம் அடைந்தது. என்றாலும் நிதானம் தவறாமல் பதில் அளித்தாள் அம்மங்கை.

"ஆம் ஐயா முடி நடத்தான் சென்றுள்ளார்"

மேலே ஏதாவது பேசிவிடுவோமோ என்று எண்ணிக் கீழுதட்டைப் பல்லால் கடித்துக் கொண்டாள் பணியிழை. மூவேந்தரோ அவ்வளவில் நிற்பதாயில்லை. அவளது முழுக் கோபத்தையும் எழுப்பிவிட்டு வேடிக்கை பார்க்க எண்ணினர். அல்லது அவள் சினத்தின் காரணமாக தம்மை இழித்துரைத்தால் விருந்தினரை அவமதித்த குற்றத்தை சுட்டிக் காட்டி ஏகம்பவாணன் புகழை மாசு படுத்தலாம் என்பது அவர்கள் எண்ணம்.

"முடி நடுதல் என்றால் எவ்வகை முடி நடுகின்றார்?"

முகத்தில் ஒரு சிறிதும் சலனமின்றிக் கேட்டான் சோழன்.

மெல்லியின் சீற்றம் வெளிக்கிளம்பியது. ஆயின் அவள் முறை தவறி அவர்களைப் பழிக்க விரும்பவில்லை. அவர்கள் வினாவிற்கு விடையளிக்கவும் வேண்டும். அதே சமயம், அவர்கள் ஏளனத்திற்குச் சூடு கொடுக்கவும் வேண்டும். என்ன செய்யலாம்...அவள் சிரித்தாள். அவள், கற்ற கல்வி வீணல்லவே! கனப்பொழுதில் உதிர்ந்தது ஒரு கவிதை.

ஆம் மூவேந்தர்களே! என் கணவர் ஏகம்பவாணர் முடி தான் நட்டார்...எவ்விதம் தெரியுமா?...தன்னுடைய சேனைகளை ஏருவாக்கி, பகைவரை வெட்டுதலால் உண்டாகும் இரத்த வெள்ளத்தை நீராகக் கொண்டு யானைகள் மிதித்த அருமையான சேற்றில், கல்வி கற்ற புலவர்கட்கெல்லாம் தலைவனான எங்கள் ஏகம்பவாணர் மூவேந்தர் முடியையும் நட்டு வைத்தார்"

"சேனை தழையாக்கிச்
செங்குருதி நீர்தேக்கி
யானை மிதித்த
அருஞ் சேற்றில்—மானபரன்
பாவேந்தர் வேந்தன்
பரிந்து நட்டான் ஏகம்பன்
மூவேந்தர் தங்கள் முடி."

...அவ்வளவுதான். மூவேந்தரும் திடுக்கிட்டனர். அதை அடித்து, எதிர்த்துப் பேசும் அளவு ஆற்றல் அவர்களுக்கு இல்லை. சினம் நெஞ்சை நிரப்ப, அவமானம் மறுபுறம் இடிக்க அவர்கள் முள்ளின் நிற்பது போன்று உணர்ந்தனர். மேலும் சிறிது நேரம் அங்கு தங்கியிருந்தால்...அந்தத் தமிழ் மகள் தங்களை எவ்வெவ் விதங்களில் இழித்துரைப்பாளோ என்றஞ்சிய அவர்கள் மறு பேச்சின்றி எழுந்தனர். விரைந்து வெளிச் சென்றனர். சற்று நேரத்தில் அரண்மனையை அடுத்த நீண்ட சாலையிலே குதிரைகளின் குளம்போசை கேட்டது. மெல்லி வாய் விட்டுச் சிரித்தாள். முல்லைப் பற்கள் இற்று வெளி வந்து விடுமோ எனுமளவில் ஓயாது சிரித்தாள். சிரித்த வண்ணமே வீடு திரும்பப் போகும் மன்னனுக்கு வேண்டியதைச் செய்ய உள்ளே சென்றாள். அவள் நடையில் ஒரு பெருமிதம் தோன்றியது. முகத்தில் கணவன் புகழைக் கை கழுவிவிடாமல் காப்பாற்றிவிட்டோம் என்ற மகிழ்ச்சிப் பேரொளி வீசியது.

★

பழந் தமிழ் நூல்களிலே பண்டைத் தமிழ் மக்கள் வாழ்வைப் பற்றிப் படிக்கும்போதெல்லாம் அந்த நாளும் வந்திடாதோ" என்று பாடத்தான் தோன்றுகிறது. "பண்டைத் தமிழகத்தில் பெண் ஆணை வணங்கினாள். ஆணோ பெண்ணுக்குப் பெரு மதிப்பு அளித்தான். இரு துருவங்களில் வேலை செய்ய வேண்டியவர்கள் இருவரும் ஆண் பாடுபடத்தக்கவன், பெண் பாது காக்கத்தக்கவள். என்றாலும் இருவரும் இணைந்து ஒரு மனதாகப் பாடுபடுமிடம் கல்விச் சாலை. அங்கு ஆண் பெண் என்ற வேற்றுமை இல்லை" என்பதைச் செவ்வனே உணர்ந்து வாழ்க்கை நடத்தினர். அதன் காரணமாக ஆண்களைப்போன்று பெண்களும் கல்வியிற் சிறந்தோராயிருந்தனர். அந்த நிலை இனி மீண்டும் வருமா?...காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ★

நாணல்

அப்போதுதான் ஒரு சிறு குருவி அந்த நாணல் தட்டை மீது உட்கார்ந்தது. உடனே நாணல் 'ஜிவ்' என்று வளைந்து கொடுத்தது. கலகலவென்று சிரிக்கும் ஒலி பின்புறமிருந்து கேட்டது. நாணல் திரும்பிப் பார்த்தது. ஆற்றுக் கரையில் இருந்த அந்த அரசமரம்தான் சிரித்தது. வானளாவ நின்ற அந்தப் பெரிய மரம் கடகடவென்று மீண்டும் சிரித்துத் தீர்த்தது.

"ஏன் சிரிக்கிறாய்? அப்படி என்ன வேடிக்கையைக் கண்டுவிட்டாய்?" என்று நாணல் கோபத்தோடு கேட்டது.

"சின்னஞ் சிறு குருவி! மனிதன் கையில் பிடித்தால் அதற்குள் அடங்கிவிடும்! அவ்வளவு சிறிது! அது வந்து உட்கார்ந்தவுடன் இப்படி வில்போல வளைகிறாயே. அதை நினைத்துச் சிரித்தேன்" என்றது அந்த மரம்.

"அதை நினைத்து ஏன் சிரிக்க வேண்டும்?"

"உன்னைப் போலவே மனிதரிலும் பலபேர் இருக்கிறார்கள். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் ஏதுமற்றவர்கள். பஞ்சடைந்த கண்கள், பரட்டையான தலை, எலும்பும் தோலுமான உடல்! இருந்தாலும் நாலு வீட்டில் பிச்சையெடுத்தாவது வாழத்தான் நினைப்பார்களே தவிர சாகத் துணிய மாட்டார்கள். அவர்களையும் உன்னையும் சேர்த்து நினைத்தேன்; சிரித்தேன்."

"ஏழையாக இருந்தால் வாழக் கூடாதா?"

"நன்றாக வாழ் அப்பனே! ஆனால் நீ எவ்வளவு காலம் தான் வாழ முடியும்? உலக நியதி உனக்குத் தெரியாது. உலகில் பலமுள்ளவன்தானப்பா வாழ முடியும். டார்வின் என்ற தத்துவ ஞானி என்ன எழுதி வைத்திருக்கிறான், தெரியுமோ? தகுதியுள்ளதுதான் உலகில் வாழும்; பலமுள்ளதுதான் மிஞ்சும்."

"அதற்காகப் பலமற்றவர்கள் பலமுள்ளவர்களுக்கு இரையாகவேண்டும் என்கிறாயா?"

இதைக் கேட்டு மரம் இடியெனச் சிரித்தது. "என்ன அப்பனே! இரையாக வேண்டுமா என்கிறாயே! இரையாகிக் கொண்டுதானே இருக்கிறார்கள். சின்ன மீன் பெரிய மீனுக்கு இரை! ஆடு சிங்கத்துக்கு இரை! மனிதரிலே ஏழை பணக்காரனுக்குப் பலி! படிக்காதவன் படித்தவனுக்கு இரையாகிறான். புரோகிதன் பக்தர்களைப் பலி வாங்குகிறான். எங்கு நோக்கினாலும் பலி வாங்கும் படலம் தானே!"

நாணல் மிகவும் வருந்தியது.

மரம் தொடர்ந்தது: "ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். மனத்தில் போட்டுவை. உலகத்தை நீ மாற்றமுடியாது. உள்ளத்தைக் கொண்டு திருப்தியடைய வழியைப் பார்" என்று சொல்லிவிட்டு மரம் அண்ணாந்து வானத்தைப் பார்த்தது. வானத்திலே திரள்திரளாக மேகக் கூட்டங்கள்!

நாணல் இதைக் கேட்டுக் கண்ணீர் வடித்தது. கண்ணீர் ஆற்றோடு ஆறாக ஓடியது.

சிறிதுநேரத்தில் வானத்து மேகங்கள் ஒன்றாகக் கூடின. கிழக்கிலிருந்து வேகமாக முகிலினங்கள் வந்து வந்து குவிந்தன. கதிரவன் மெல்ல மெல்ல மேகத்திரளில் ஒளிந்து விளையாடினான். வானம் எல்லாம் இருண்டது. ஏதோ ஒரு புதிய பொலிவு ஏற்பட்டது. பூமியில் ஒருவிதமான இனிய மணம் வீசியது.

திடீரென்று எங்கிருந்தோ 'டுடும் டுடும்' என்று பேரிடி இடித்தது! பளிச் பளிச்சென்று மின் வெட்டியது! சடார் சடார் என்று மழை முத்துக்கள் சிதறின! ஆ, ஓ என்று ஒரே பேய்க் கூச்சல்! இடியும் மழையும் புயலும் அண்டங்கள் அதிரும்படி தங்கள் கைவரிசையைக் காட்டின.

வீட்டுக் கூரைகள் பறந்தன! மனிதக் குஞ்சுகள் மச்சின் உள்ளே புகுந்து வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்டின. குளம், கண்மாய், வயல் வரப்பு எல்லாம் உடைந்து புது வெள்ளம் தெருவெல்லாம் நிரம்பியது. பறவைகள் எல்லாம் மரத்திலிருந்து தொப் தொப்பென்று விழுந்து வெள்ளத்தில் மிதந்தன. எங்கே பார்த்தாலும் ஒரே அழிவு, அழிவு! மாட மாளிகைகள் மண்மேடுகளாகக் காட்சியளித்தன! கைபோனவர், கால் இழந்தவர், பிணமாகிப் போனோர் ஏராளம்! எங்கு நோக்கினாலும் ஓலம்! 'ஐயோ' என்ற அலறல்! 'அம்மா' என்ற முனகல்! "போய் விட்டாயாடா, கண்ணே" என்ற புலம்பல்! "என்னைத் தவிக்க விட்டுவிட்டீர்களே" என்ற ஒப்பாரி! சண்டை செய்து ஓய்ந்த களம்போலக் காட்சி தந்தது அந்த இடம்.

ஆற்றில் வெள்ளம் வடிந்துகொண்டிருந்தது. நாணலைக் காணவில்லை. சிறிது சிறிதாக வெள்ளம் குறையக் குறையத் தலை தெரிந்தது. பின் உடல் தெரிந்தது. வெள்ளம் வடிந்தவுடன் நாணல் வெளியே தெரிந்தது. இப்போதுதான் குளித்து முழுகிய புது மணப்பெண்ணைப்போலக் கொள்ளை அழகோடு நின்றது நாணல். வானத்தைப் பார்த்தது. ஒரு மேகத்துண்டுகூட இல்லை. கதிரவன் மெல்லிய வெயில் பரப்பிக்கொண்டிருந்தான். மலைகள் எல்லாம் புது அழகோடு நின்றன. மெதுவாகப் பின்புறம் திரும்பிப் பார்த்தது நாணல்.

அங்கே வேரோடு பறிக்கப்பட்டுச் சாய்ந்துகிடந்தது மரம்!

—"அமரன்"

இதுதான் திராவிடநாடு

கா. அப்பாதுரையார்

-14-

வைத்க தருமத்தில் பிராமணர் முதலிய உயர் வருணத்தில் பிறந்த ஆணுக்குக்கூடப் பிறப்பில் தீட்டு உண்டு. அவன் சூத்திரனுகப் பிறப்பதாகத்தான் சாத்திரங்கள் கருதுகின்றன. பிறந்த வீட்டுத் தீட்டுச் சூத்திரச்சியாகிய தாய் வயிற்றில் பிறந்த தீட்டே. ஆனல் முழுதும் தீட்டு உபநயனத்தின்போது வேத மந்திரங்களால் தான் தீரும். அதுவரை அவன் பிராமணர் முதலிய உயர் வருணத்தில் பிறந்திருந்தாலும், சூத்திரச்சி வயிற்றில் பிறந்த சூத்திரச்சி அதன் பின் தான் பெண் வயிற்றில் பிறந்த பாவத்தை, இழிவை வேத மந்திரங்களால் போக்கி, பிராமணனுக வாழ்கிருன். பெண்ணுடனே வாழும் இல்லறத்தை ஆரியம் வெறுப்பதற்கும் 'சம்சார பந்தம்', 'உலக மாயை' என்று தலையிலடித்துக்கொள்ளுவதற்கும் உள்ள அடிப்படைக் காரணத்தை அறிந்த எந்த பிராமணனும் ஆரியருடன் வாழ ஒருப்படமாட்டாள். ஏனென்ருல் நாள் தோறும் பெண் பேயைத் தொட்டு ஊடாடுவதால்தான் இல்லறம் தீது, துறவறம் நன்று என்று கூறப்பட்டது. நாள் தோறும் இரவில் பெண் பேயுடன் கூடிய தொடர்பை நீக்கத்தான் காலைக் குளி வைதிகருக்கு இன்றியமையா ஆரியக் கடனுகிறது!

ஐயர், ஐயங்கார், செட்டியார், முதலியார் இந்தப் பட்டங்கள் ஆடவருக்குத் தான் உண்டு. அவர்கள் வீட்டுப் பெண்களுக்குக் கிடையாது. ஏனென்ருல் எல்லாப் பெண்களும் ஆரியத்தின் கண்ணில் சூத்திரர்களே—உண்மையில் சூத்திரர்களில் ஆண்களிலும் பஞ்சமரில் ஆண்களிலும் கீழான பேய்களே!

ஆரியம் உலகில் வாழ்வதற்கு, வளர்வதற்குரிய ஒரு காரணம் அது எல்லா வகைத் தன்னலங்கள், பொய்மைகள், வஞ்சகங்கள் ஆகியவற்றுக்கும் தாராளச் சலுகை தந்து வஞ்சகக் கோட்டையாக நிலவுவதுதான். ஆனல் அதே சமயம் அது ஆயிரக்கணக்கான ஆண்டு நிலவுவது உலக அதிகப் பழக்கங்களிலேயும் விசித்திரமான ஓர் ஆதிசயம்தான். சிந்திக்கும் பண்பு எங்கு வளர்ந்தாலும் அங்கே அது நிலவ முடியாது. ஏனெனில் அது ஒருவர் இருவரை, ஒரு குழுவை மட்டும் வஞ்சிப்பதன்று. திருடர் எல்லார் வீட்டிலும் திருடுவர். தம் வீட்டில் திருடமாட்டார். ஆரியமோ எல்லாரையும் வஞ்சிக்கும். தன்னையும் விட்டு வைக்காது. திருடர் வீட்டிலும் திருடும், வஞ்சகரையும் வஞ்சிக்கும். முக்கால உணர்வுடையவர் என்று கூறும் எந்த முனிவராவது, பிராமணராவது சிறிது தொலை நோக்குடன் சிந்தித்திருந்தால், இந்த ஆரியம் ஒரு கணம்கூட நிலவியிருக்க முடியாது. ஆனல் கணக்குப் பிள்ளையை மாற்றிக்கொண்டே வரும் கள்ள மார்க்கட்டுக்காரரைப்போல, ஆரியம் எந்த ஆரியரையும்கூட நம்புவதில்லை. வடநாட்டுப் பிராமணரிடம் தென்னுட்டுப் பிராமணரெல்லாம் சண்டாளர் என்று அது கூறிவைக்கிறது. ஆனல் தென்னுட்டுப் பிராமணரிடமோ, அது 'வடநாட்டிலுள்ள பிராமணரிடம் நெருங்காதே, அவர்கள் ஆசாரம் கெட்டவர்கள், மீன் தின்பவர்கள்' என்று கூறுகிறது. பிராமண ஆணிடம் பெண்ணை நம்பாதே என்று போதிக்கிறது. பிராமணப் பெண்ணிடம் அது வேறு தொனியில் பேசுகிறது. 'ஆடவன் காரியத்தில் தலையிடாதே, உன் புத்தியைப் பயன்படுத்திக் கொள். அவள் போக்கில் அவனை விட்டு, அவள் சொல்படி நடந்தால், உனக்குக் கேடொன்றும் குறைவராது. உன் தர்மம் உனக்கு எல்லாம் இகத்திலும் பரத்திலும் தரும்' என்று புராண இதிகாச மொழியில் கூறியிருக்கிறது.

ஆரிய இனத்தவர் தான் ஜெர்மானியர், ஆங்கிலேயர். ஆரிய இனத்தவர் தான் உலகாண்ட உரோமர், மேலை உலகுக்கே உரைவிடம் அளித்த கிரேக்கர். ஆனல் 'ஆரியம்' அங்கே கிடையாது. ஆனல் ஆரியர் வாழ்ந்த நாடுகளில் ஒரே ஒரு நாட்டில்தான் ஆரியர் 'ஆரியம்' படைத்தனர். அதுவே திராவிட நாடு. திராவிட நாட்டை வளர்ப்புப் பண்ணையாகக் கொண்டு வளர்த்த ஆரியம் தான் இந்தியாவிலே, ஆசியாவிலே ஆரியம் என்ற பெயரால் ஒரு போலி நாகரீகம் பரப்பிற்று, பரப்பி வருகிறது. அந்தப் போலி நாகரீகம்தான் உலகாண்ட செங்கிஸ்கான் மரபை, கைரஸ் மரபை, புத்தர் அசோகன் மரபை, 'கீழ்' திசை, அடிமை திசையாக்கியுள்ளது.

இன வேறுபாடற்ற மேலை யுலக நாகரிகமும் அதேபோல இன வேறுபாடற்ற திராவிட நாகரீகமும் 'இனம்' என்ற சொல்லையே உலகில் உயர்த்திய இனங்கள், நாகரிகங்கள், அந்தப் பொருளில் 'இனம்' என்ற சொல்லை ஆக்க முறையில் பயன்படுத்தித்தான் திராவிட இயக்கம் இனத் தேசியம் பேசுகிறதே தவிர, ஆரியச் சார்பாளர் உள்ளத்தில் படமும் கீழ்த்தரப் பொருளுடைய சொல்லைப் பயன்படுத்தி அது பேசவில்லை.

'ஆரியமாவது, திராவிடமாவது' என்று பேசுபவர் வரலாறறியாதவர் மட்டுமல்ல. வரலாறறிந்த பின்னும் இந்தப் பண்பு வேறுபாடறிய முடியாதவர்களே யாவர்.

யார் திராவிடர், யார் ஆரியர் என்று இன்றுகூற முடியாமலிருக்கலாம்; கூற முடியலாம். ஆனல் யார் திராவிடப் பண்புடையவர், ஆரியப் பண்புடையவர் என்று கூறுவது எளிது, மிக மிக எளிது. ஏனெனில் ஆரியப்—பண்பாடு போற்றும் வருணுசிரம தருமம் ஆரிய திராவிட வேறுபாட்டை, வேற்றுமையோ, உயர்வு தாழ்வடிப்படையில், 'நித்திய முதலாளித்துவ' அடிப்படையில், சுரண்டல் அநீதி அடிப்படையில் உலகில் என்றென்றும் நிலைநிறுத்துவதே யாகும். அதை என்றென்றும் நிலைநிறுத்துவதற்காகவே அதற்கு அண்மைக் காலப் பெரியார்கள் சிலர் பழய உபநிடத வாசகமொன்றுக்குப் புது வழக்கும் புதுப் பொருளும் அளித்துச் 'சனுதன தர்மம்'—கடவுளைப் போல நித்தியமான, அனுதியான இயற்கை முறை என்ற புது வழக்குப் படைத்துப் புதுப் புது பெயரிட்டிருக்கிருர்கள். அதைக் கடவுள் நெறி என்று இயற்கை முறை என்று காட்டவே, மொழிகளில் வருணுசிரமம் (வேத மொழி வான்சுரர் மொழி, சமஸ்கிருதம் பூசுரர், பிராமணர் மொழி, பிராகிருதம் பாலி ஆகியவை வைசிய மொழியுடன், வட இந்தியத் தாய்மொழிகளான இந்தி முதலியவை சூத்திர மொழிகள், தமிழ் தெலுங்கு முதலிய தென்னுட்டு மொழிகள் பஞ்சமர் மொழிகள், ஏனைய மொழிகள், சண்டாள மொழிகள், பேய் மொழிகள்), எழுத்துக்களில் வருணுசிரமம் (உயிர் எழுத்து பிராமணர், வல்லெழுத்து க்ஷத்திரியர், சார்பெழுத்துக் கலப்பினத்தவர், பஞ்சமர், சண்டாளர்), பல வகைகளில் வருணுசிரமம் (ஆசிரியப்பா பிராமணர், வெண்பா க்ஷத்திரியர், கலிவைசியம், வஞ்சி சூத்திரர், கம்பர் கால விருத்தம் போன்ற பாவாணர்கள் பஞ்சமர், நாடக சினிமாப் பாட்டுக்கள் சண்டாளர்). கிரகங்கள் ராசிகளில் வருணுசிரமம் (பிரகஸ்பதி அல்லது வியாழன் பிராமணன், சனி சூத்திரன், ராகு பஞ்சமன், கேது சண்டாளன்) ஆகியவற்றை யெல்லாம் தமிழிலேயே ஆரியப் பண்பாளர் இடைக் காலத்தில் அரும்பாடுபட்டு உண்டுபண்ணியுள்ளனர். இனமலர், இன வண்டு, இனப் பரிமா ஆகிய பண்பார்ந்த தமிழ்ச் சொற்களைக்கூட மெள்ளச்சாதி மலர், சாதி வண்டு, சாதிக்குதிரை என மாற்றி, இன்றைய தமிழரிடை இம் மாறுபட்ட வழக்கு புகுத்தப்பட்டு வருகிறது.

ஆரியம் மிகுதி நுழையாத பகுதி—எப்படியும் இந்தியாவில் உருவாக்கப்பட்ட செயற்கை ஆரியத்தை அறியாத பகுதி மேலை உலகு. ஆனல் அங்கே கூட இனக் கலப்பால் ஆபிரிக்காப் பகுதியிலுள்ள வெள்ளையர்களிடையே நிற வேறுபாடு நிலவுகிறது. இது இயற்கை வேறுபாடு, வெளி நாகரீக வேறுபாடு மட்டுமே அத்துடன் தன்னலம், குழு நலம், ஆட்சி வகுப்பு இறுமாப்பு, நிற இறுமாப்பு ஆகியவை இவற்றுக்குச் சற்று வலிமை தந்து விடுகின்றன. ஆனலும் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள வேறுபாட்டுடன் இது ஒப்பிடத்தக்கதன்று. ஏனெனில் இங்கே துணைக் கண்டத்தில் வேறுபாடு வேறு மொழி வேற்று கூட்டாளிடையேயன்று, ஒரு கன்னட மொழி பேசுபவர், ஒரு நாட்டில், ஊரில், தெருவில் வசிப்பவர்களிடையே—மலையாள நாட்டில் ஒரு குடும்பத்தவரிடையே கூட நிலவுகிறது—இரண்டாயிரமூவாயிர ஆண்டுகளாக ஒருங்கே வாழ்ந்து வருபவர்களிடையே நிலவுகிறது. இது மட்டுமா? மேலையுலகிலுள்ள இன வேறுபாடுகளுக்கு எந்த மதத்தின் ஆதரவும் கிடையாது. துரதிருஷ்ட வசமாக வெள்ளையரோ, நீகிரோவரோ, எவராவது பாழாய்ப் போன 'இந்து, மதம் சேர்ந்தாலல்லாமல் அந்த நிலை ஏற்படவும் செய்யாது. கிரித்தவ, இஸ்லாமிய சமயங்கள் அவ் வேறுபாடுகளை, உயர்வு தாழ்வு அநீதிகளை அகற்ற முடியாமல் இருக்லாம். அகற்ற முடியாமல் பேசாதிருந்து உடந்தையாகக்கூட அமையலாம். ஆனல் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ளபடி. உயர்வு தாழ்வு வேறுபாடு கடவுளால் அமைக்கப்பட்டது என்று கூறும் நிலை—சாத்திர சம்பிரதாயங்களால் அரண் செய்து காப்பாற்றப்படும். உலகின் எந்தச் சமயத்திலும் இல்லை. எந்த நாட்டிலும் மேலோர் பேணி வளர்க்கப்படும் நிலை—அறவோர் இதைத் தெய்வீக அமைப்பு என்று வாதாடவும் முடியாது. கிரித்தவ இஸ்லாமியர் மரபுப்படி கடவுளுக்கு எதிரியான ஒரு பேய் மகள் அல்லது சைத்தான் அவதாரமெடுத்து ஒரு மதம் உண்டுபண்ணினுல்கூட, அது வருணுசிரம சனுதன இந்து மதத்தளவு அறிவுத்துணிவுடனும், கட்டுப்பாட்டுடனும் உயர்வு தாழ்வு அநீதியை எடுத்துக்கொள்ளுமென்று, அதற்கு விளக்கம், விளக்க வேதாந்தம் கூறுமென்று கூற முடியாது. ஆனலும் இந்தியாவில் ஆரிய மரபில் தேவர், முனிவர், அவதார புருடர், அருளாளர்கள் முதற்கொண்டு அவ்வாறு விளக்க முன்வந்துள்ளனர். வருகின்றனர்! சைத்தானே கடவுளுருவாகக் காட்சிதரும் இது போன்றதொரு துணைக் கண்டம் கடவுட் படைப்பில் வேறு கிடையாது. இதனுல் தானே என்னவோ இந்தத் துணைக் கண்டத்தைப் புண்ணிய பூமி போக பூமி என்று புராணங்கள் போற்றிப் புகழ்கின்றன—யாருக்குப் புண்ணியமோ, யாருக்குப் போகமோ அதை அந்தக் கடவுள்தான்—அல்லது அந்தச் சைத்தான்தான் உணர வேண்டும்!

- தொடரும் -

ஜனவரி முதல் வாரம் எங்கும் கிடைக்கும்!

முல்லை

— ஜனவரி இதழ் —

'என் பாட்டை நான் கேட்டேன்!'

—பி.

சிறுகதைப் போட்டி விபரங்கள் மற்றும் பல

விலை அணு எட்டு

முல்லை :: சென்னை-6.



எங்கும் கிடைக்கும்.

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

விலங்கிடுங்கள். கழுகு மரம் என் உயிரைக் குடிக்கட்டும். இனி எனக்கு வாழ்வு வேண்டாம்! நாடு வேண்டாம்! மரணம் மட்டுமே வேண்டும்!'' வேதனைத் தோய்ந்த மீனிசாவின் வார்த்தைகள்!

''அரசே! இதென்ன வார்த்தை? உங்கள் குடி மக்களை நிராதரவாக விட்டுவிட்டுப் பிரியப்போகிறீரா?'' குடி மகன் ஒருவன் உருக்கத்தோடு கேட்டான். பல குரல்கள் அவன் கருத்தை வலியுறுத்தின.

மீனிசாவின் விழிகள் தீப்பொறிகளை கக்கின. ஆவேசமான குரலில் முழக்கினான். ''உங்கள் மன்னன் நலனில் அக்கரையுள்ள நீங்கள் தான், அவனுக்கு இதயம் போன்ற ராச கேசரியை வெறுத்தீர்கள். அவளை சாகடிக்கவும் செய்தீர்கள். ராசகேசரியின் மையலில் சிக்கிவிட்ட நான் சோழப் பேரரசுக்குக் கப்பம் கட்ட மறுக்கிறேன் என்று இகழ்ந்தீர்கள். மயக்குக்காரி, மாயக்காரி என்று அவளைத் தூற்றினீர்கள். ராசகேசரியை நான் சிறை எடுத்திருப்பதாகவும், அவளை மீட்கவே சோழப் பேரரசர் குடமலை நாட்டின்மீது படையெடுக்கிறார் என்றும் வாய் வலிக்காமல பேசினீர்கள். அன்புக்கும் அழகுக்கும் மட்டும் பிறவி எடுத்திருந்த ராச கேசரியை சொற்களால் தீய்த்தீர்கள். ஆடற்கலையின் சிகரமாக விளங்கிய கலைச்சுடரை அணைத்துவிட்டீர்கள். அவள் உங்கள் பேச்சுக்கெல்லாம் பதில் சொல்லும் வகையில் நடந்து கொண்டாள். தான் தூய்மையானவள் என்பதை நிரூபித்துவிட்டாள். இறக்கும் போதும் நாட்டிற்காக எனக்காகவே செயல்பட்டாள். என் இதயத்தை இழந்துவிட்ட நான்...'' அவன் அலுத்துப்போனான். துயரம் அவன் குரலை அழுத்தியது விழிகளில் வறட்சி! நாவறண்டது!

''ராசகேசரி உங்கள் நாட்டிலிருப்பதை நாங்கள் அறியோம். நாகன் காடன் அவளை எங்கோ கொண்டு சென்று விட்டான் என்று நினைத்தோம். இன்னும் சிலர் அவள் ஆற்றுச் சுழலில் சிக்கி மாண்டுவிட்டாள் என்றனர். ஆண்டுகள் பல ஓடிவிட்டன. நீங்கள் நினைத்ததைப் போன்று ராசகேசரி மாயக்காரியல்ல. அவள் கலைச் செல்வம்! அவளை வீணே இழந்தோம்...'' ராஜராஜன் தெளிவாக பேசினான்.

''மீனிசா, ராசகேசரியை நீங்கள் எப்படி சந்தித்தீர்கள்?'' குந்தவை குழந்தையாக வினவினாள்.

''இளவரசி, எங்கள் சந்திப்பை விளக்கியே தீர வேண்டும். பலர் பலவிதமாக நினைத்து வருகின்றனர். உண்மையை எல்லோர் முன்னிலையிலும் சொல்லுகிறேன். ஒரு நாள் நான் வேட்டைக்குச் சென்றிருந்தேன். வேட்டையில் இளைப்பாற நினைந்த நான். காட்டின் எல்லையோரப் பகுதியான ஆற்றை அடைந்தேன். ஆற்றைக் கண்டதும் ஆசை அதில் குளிக்க துடித்தது. என் வீரர் எவரும் என்னைப் பின் தொடரவில்லை. தனியாக ஆசைதீர ஆற்று நீரில் நீந்தினேன். புது வெள்ளப் பெருக்கு என்னை மகிழ்வித்தது.

சற்றும் எதிர்பாராத விதத்தில் ராசகேசரி நீரில் அடித்து வந்தாள். வெள்ளத்தில் பெண் அடித்து வருவதைக் கண்டதும் மனம் பதைத்தது. அவளை நீரிலிருந்து தூக்கி வந்து கரையில் கிடத்தினேன். சிறிதுநேரத்தில் அவள் உணர்வு பெற்றாள். அவள் வாய் 'நாகா, நாகா' என்று குளறியது. என்னைக் கண்டதும் பயந்தாள். என்னை யார் என்று அவள் அறியாள். வழிப்போக்கன் என்று தேற்றினேன் அப்பொழுதுதான் அக்கரையிலிருந்த நாகன்காடனிடமிருந்து சிரிப்பொலி கேட்டது. பரிதாபமான நிலையிலிருந்த ராசகேசரி அவனைக் கண்டதும் அலறித்துடித்தாள் வல்லூறைக் கண்ட கோழிக்குஞ்சு அன்ன அலமந்தாள். உபகாரம் செய்து அபகாரத்தையும் செய்யாதீர்கள் என்று கெஞ்சினாள். நாகன் காடன் மேலும் சிரித்தான். அவன் சிரிப்பு என்னை வெறி கொள்ளச் செய்தது.

''நாகா அபலைப் பெண்ணை இப்படி அலட்டியடிப்பது சரியல்ல'' என்றேன்.

''குடமலை அரசே, இது தங்களை மீறிய விஷயம்.'' என்று பொறுமினான். மருண்ட ராசகேசரி என்னை இன்னான் என்று தெரிந்ததும், பயத்தாலும் சந்தோஷத்தாலும் துவண்டாள்.

''இது என்னை மீறிய விவகாரமல்ல. அப்படியிருந்தாலும் அடைக்கலம் புகுந்தவர்களை பாதுகாப்பது தான் அரசதர்மம்.'' என்றேன்.

''அவள் எனக்குரியவள் என்னிடம் ஒப்படையும்-அதுவும் அரச தர்மம் தான்.'' அதட்டி கேலி செய்தான் நாகன்.

''நாகா, நீ பேசுவது குடமலை மன்னனிடம். அதட்டி மிரட்டுவதோ, இகழ்வதோ பலனற்றது மட்டுமல்ல விபரீதமுங்கூட...!'' என்றேன்.

''அவள் சோழ தேசத்து நாட்டியக்காரி. சோழப் பேரரசுக்கு நீர் பதில் சொல்லவேண்டும். வம்பை விலைக்கு வாங்காதிர்!'' என்றான்.

''சக்கரவர்த்தியிடம் நியாயம் கேட்கலாம்.'' என்றாள் ராசகேசரி ஆத்திரத்தோடு.

''வம்பு உன் வாழ்வோடு உழல்கிறது. நாகா. வேதனையை தேடிக் கொள்ளாதே. சோழப் பேரரசரிடம் முறையிட்டுக்கொள். இங்கே முட்டி மோதி பங்கமடையாதே.'' என்றேன்.

''குடமலை மன்னா, உம்மிடம் வாதமேன்? வல்லூறு வேடனிடம் நீதி கேட்பதா? அவளை என்னுடன் அனுப்புகிறீரா? இல்லையா?'' என்று உறுமினான். அவன் பேச்சின் தொடர்ச்சியான செயலை உணர்ந்தேன் குறிப்பாக. ராசகேசரியுடன் குதிரை கட்டியிருந்த மரத்தருகில் வந்துவிட்டேன்.

''அனுப்புவதாக உத்தேசமில்லை. சோழப் பேரரசரிடம் முறையிட்டுக் கொள்ளலாம். பிறகு நடப்பதைப் பார்ப்போம்.'' என்று சொல்லி முடிக்கு முன்பே அவனுடைய அம்பு என் தோள்பட்டையை சிராய்த்துக்கொண்டு சென்றது. அவனுடைய செயலின் விளைவு கண்டு அவனே ஆங்காரமாக சிரித்தான். தோள்பட்டையிலிருந்து உதிரம் பிரவாக மெடுத்தது. ராசகேசரி என்னை நெருங்கி கட்டுப் போட வந்தாள். என்னுடைய எச்சரிக்கையால் மரத்தில் மறைந்து கொண்டாள். குதிரை லகானை ஒரு கரத்தில் பிடித்தபடி நாகனைப் பார்த்தேன். மறு அம்பை நாணில் பூட்டி, வில்லை வளைத்து தயாராயிருந்தான்.

''மீனிசா, உயிர் வேண்டுமானால் ராசகேசரியை என்னுடன் அனுப்பிவிடு.'' என்று உறுமினான். மின்னல் வேகத்தில் என் செயல்கள் நடைபெற்றன. வில்லும் அம்பும் என் கரங்களில் தவழ்ந்தன. மறு அம்பை அவன் என் உயிரைக் குடிக்கும் விதத்தில் எய்தான். ஆனால், அந்த அம்பு என் அருமையான குதிரையின் பின்கால் தொடையை கவ்வியது. குதிரையின் பரிதாபமான அலறல் என்னை உலுக்கிற்று. எனது ஆவேசம் மனப்பிடறியை பிடித்தாட்டிற்று. மின்போதில் என் வில்லிருந்து கிளம்பிய சரம் அவன் நெஞ்சுக்குழியைத் துளைத்துச் சென்றது. அவன் கதறிய கதறல் காட்டையே கிடுகிடுக்க வைத்தது. நெடுமரம் என தரையில் விழுந்தான். ராசகேசரி கண்களை மூடிக் கொண்டாள். அவள் உடம்பெல்லாம் பதறியது. அவன் முடிவு என்னையும் பரிதவிக்கச் செய்தது. அவல ஓலம் கேட்டு என் வீரர்கள் ஓடிவந்தனர். என் கட்டளைப்படி நாகன்காடனுக்கு செய்யவேண்டிய கிரியைகளை செய்துமுடித்தனர். அன்றுமுதல் ராசகேசரி என் நாட்டின் குடிமகளானாள். மலைய நாட்டின் மங்காத கலைச்சுடராய் ஒளிர்ந்தாள். என் இதயத்தில் இதயமாக; உணர்வின் உணர்வாக வாழ்ந்தாள். சலை பேசும் அவள் விழிகள்-எங்கள் நாட்டின் கலங்கரை விளக்குகளாக ஜ்வலித்தன. எனக்காகவே வாழ்ந்தாள்! எனக்காகவே மடிந்து தியாகியானாள்! ஆனால் நானோ...இன்னும் சாகாமல் இருக்கிறேன். ராசகேசரி...'' என்று பரிதாபமாகக் கதறி ராசகேசரியின் சடலத்தை மண்டியிட்டு வணங்கினான் மீனிசா. அக்காட்சி அங்கிருந்தோரை எல்லாம் உருக வைத்தது. குந்தவை கண்ணீர்ப் பிரவாகத்தில் மிதந்தாள்.

''மீனிசா, உன் வீரம் என்றும் அழியாது. அப்படியே ராசகேசரியின் தியாகமும் என்றும் நின்று நிலவும். நீ முன்போலவே உரிமையுடன் குடமலை நாட்டை ஆளலாம். உன் வீரத்திற்குப் பரிசாக 'மாளவி'யையும் அளிக்கிறேன். சுதந்திர வீரனாக என்றென்றும் ஆட்சி செலுத்து, மீனிசா!'' ராஜராஜனின் குரலில் தெளிவும் மரியாதையும் தொனித்தது. மீனிசாவையும் மன்னவனின் பெருமையான பேச்சு நெகிழச் செய்தது குடமலை மக்களுக்கு மன்னவனைப் போற்றும் வழி தெரியவில்லை. துயரத்தின் ஓரத்திலேயே மகிழ்வின் ஓங்காரக் கூச்சல்...!

'சோழப் பேரரசர் வாழ்க! குடமலை மன்னர் வாழ்க!' ஆயிரமாயிரம் குரல்கள் முழங்கின மகிழ்ச்சிப் பெருக்கின் பிரவாகம் அவையை சூழ்ந்தது.

''வேந்தர் வேந்தே! தங்களின் பெருந்தன்மையும், எளியோனை மதித்து நடத்திய பண்பும் வரலாறு உள்ள அளவும் போற்றிப் புகழப் படும். நான் என்ன கைம்மாறு செய்யமுடியும்!'' மீனிசாவின் குரலில் நெகிழ்ச்சி இருந்தது.

''யாருக்கும் தலைவணங்காமல் ஆட்சி செய்! நீ எனக்கு செலுத்தும் கைம்மாறு அதுதான்...மீனிசா!'' மன்னன் பேசினான். மீனிசாவுக்கு உள்ளம் உருகியது. ராஜராஜனைப் பார்த்தான். ராசகேசரியைப் பார்த்தான். மீனிசாவின் விழிகளில் நீர் கொட்டியது.

''தங்கள் வாழ்த்து...'' நாதழுதழுத்தது மீனிசாவுக்கு. அன்போடு அணைத்துக்கொண்டான் சோழப் பேரரசன் மீனிசாவை. அக்காட்சி எல்லோரையும் உருகவைத்தது.

மன்றம் கலைந்தது. ராசகேசரியின் சவ அடக்கத்திற்கு ஏற்பாடுகள் துவங்கிற்று. ராஜராஜன், ராஜேந்திரன், குந்தவை எல்லோரும் அரண்மனை சென்றனர். மீனிசா மக்கள் வெள்ளத்திலும், ராசகேசரியின் நினைவிலும் துவண்டான்.

''ராசகேசரி...'' முணுமுணுத்தான் ராஜராஜன்.

''மீனிசாவின்...'' என்று தழுதழுத்தான் ராஜேந்திரன்.

''காதலி...!'' குந்தவை அழுத்தமாக ஆனால் மெல்ல சொன்னாள்.

நண்பர்களே,

பணம் வருகிறது.
பறந்து போகிறது.
சம்பாதிக்க ஓடுகிறோம்.
சம்பாதிக்கிறோம்.
செலவழிக்கிறோம்.
அதில் ஒரு ரூபாய்...
இரண்டு ரூபாய்...
ஐந்து ரூபாய்...
தமிழையே கற்று
தமிழுக்கே உழைத்து
தமிழ் வடிவில் இயங்கி;
கொள்கைபற்றுக் கொண்டு
தடியடிகளைத் தாங்கி,
வறுமையில் அவதிப்படும்
மாபெரும் புலவருக்குத்
தரக்கூடாதா?
அண்ணா பொருளாளர்
நாவலர் செயலாளர்
விழாக்குழு உருவாகிறது.
உயிருள்ளபோதே மரியாதை.
உங்கள் பங்கு?
மனமிருந்தால் வழியுண்டு;
மனம் இருக்கிறதா?
செயல்படுத்துங்கள்.

நிதி அனுப்ப முகவரி:

சி. என். அண்ணாதுரை,
'அறிவகம்'
24, சூரியநாராயண செட்டி தெரு,
சென்னை-13.

9. மனமே உனக்கென்ன வாய்?

நெஞ்சாரக் காதலித்த நேரிழையை நீமணக்க
அஞ்சினாய்; ஓடினாய்; அன்னவளும்-துஞ்சிப்
பிணமான பின்னால் பிதற்றுகிறாய் பாவி
மனமே உனக்கென்ன வாய்?

—ந. ப. இரத்தினம், முதுகுளத்தூர்

❁

கல்லெடுத்து வீசிடுவாய் கன்னல் எனஇனிக்கும்
சொல்லெடுத்து வீசச் சுணங்கிடுவாய்-சொல்லை
அனலாய் உதிர்த்திடுவாய் ஐயமுற்றே வாழும்
மனமே உனக்கென்ன வாய்?

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

❁

எட்டாக் கனியென்றால் எட்டியே பாரென்பாய்
கிட்டாத கொம்புத்தேன் கிட்டுமென்பாய்-வெட்டுங்
கணைவிழியில் கள்ளமுதம் உண்டென்பாய்; பொல்லா
மனமே உனக்கென்ன வாய்?

—மு. காளத்திநாதன், அரக்கோணம்.

❁

சாதி ஒழித்திடுக! பல்சமயப் போர்ஒழிக்க!
நீதி தழைத்து நிலவிடுக-ஓதி
இனத்தை இணைக்க! உயர்ந்துவாழ! இன்றேல்
மனமே உனக்கென்ன வாய்?

—த. பெ. சிவரத்தினம், வேலூர்.

❁

எத்துணையோ தீய இழிசெயல்கள் ஆனவற்றை
வித்தாக நின்று விளைத்தே-எத்தும்
சினமதனால் இவ்வுலகைச் சீரழிக்கும் கெட்ட
மனமே உனக்கென்ன வாய்?

—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

❁

செந்நீர் வடித்துழைத்தும் கண்ணீர் உகுக்கின்றாய்
பொன்னும் திராவிடத்துப் பூமகளே—என்னும்
தினமும் வறுமை தொலையாதே ஏழை
மனமே உனக்கென்ன வாய்?

—சி. முத்தையா, தூத்துக்குடி.

❁

ஒருநிலையில் நில்லாய்; ஒருகோடி எண்ணி
மருள்வாய்; தெளிவடைய மாட்டாய்-விரும்பா
உணர்ச்சிகளே கொள்வாய்; உயர்கல்வி கல்லா
மனமே உனக்கென்ன வாய்?

—ந. ஜாபர், சித்தயங்கோட்டை.

❁

என்னிடத்தே எப்போதும் ஏதோ இயம்புகிறாய்!
தன்னடக்க மில்லாத தாலேதான்-பின்னம்
நலியுற்றாய்! நான்சொன்ன நன்னெறியில் நில்லாய்
மனமே உனக்கென்ன வாய்?

—பொன்முருகுமணியடியான், கோதை.

❁

காதல் புரிந்திடுவாய்; கன்னியரைக் கைவிடுவாய்;
காதம் கணப்பொழுதில் ஓடிடுவாய்-நோதல்
சினத்தினைக் கைக்கொள்வாய்; சிந்தியாய்; சீச்சீ!
மனமே உனக்கென்ன வாய்?

—சோழன், திருப்பனந்தாள்.

❁

பெண்டிர்க்கு ஏன்மீசை? பெம்மானுக் கேன்பூசை?
பண்டிதர்க் கேனிந்தப் பாழும்நா?—உண்டி
தினம்காணார்க் கேன்பிள்ளை? திண்மையில் வண்டு
மனமே உனக்கென்ன வாய்?

—பாப்பா பாலசுப்பிரமணியம், இராயகிரி.

❁

மாலையெலாம் வாடினாய்; மாவீரன் என்கணவன்
சோலையிலே யில்லாத் துயர்தன்னால்-பாலை
வனந்தாண்டி வந்தவரை வார்த்தைகளா லூட
மனமே உனக்கென்ன வாய்?

—மு. பா. வி. இளம்பரிதி, கருவை.

❁

சாதி வெறிபிடித்துச் சச்சரவு செய்வார்க்கு
நீதி புகட்டி நெறிகாட்டி-மேதினியில்
பண்போடு வாழப் பாடுபட மாட்டா
மனமே உனக்கென்ன வாய்?

—கு. பரிமளம், கமுதி.

❁

செல்வி மணிமொழி சேய்மைக்குச் சென்றக்கால்
சொல்லருங் காதலால் துன்புறுவாய்-மெல்லி
உனதருகே வந்தாலோ ஒன்றுமே பேசாய்!
மனமே உனக்கென்ன வாய்?

—சி. சிவராமலிங்கம், சென்னை.

❁

நண்டே உனக்கென்ன நாட்டாண்மை? நாறுப்பூச்
செண்டே உனக்கென்ன சீர்வரிசை?-விண்ட
பிணமே உனக்கென்ன பேராசை? 'நேரு'
மனமே உனக்கென்ன வாய்?

—பே. சா. துரைராசு, நாமக்கல்.

❁

சிங்காரப் பெண்களுக்குச் செவ்வாய்; தமிழைப்போல்
மங்காத சேய்க்கு மழலைவாய்;-இங்கே
தனியரசு கேட்போர்க்குத் தங்கவாய்; வஞ்ச
மனமே உனக்கென்ன வாய்?

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

❁

தொண்டுக் கிழமெல்லாம் தொல்தமிழர் நாட்டிற்குத்
தொண்டாற்றி வாட, சுகமொன்றே-எண்ணி
'தன'வாழ்வு தேடுகிறாய் காலமெல்லாம் வீணே;
மனமே உனக்கென்ன வாய்?

—செல்வம், சென்னை.

❁

தாய்மொழிதான் சீர்கெட்டுத் தன்மானந் தானற்றுப்
பேய்மொழியாம் இந்தி பிடித்தாட்ட—வாய்ந்த
இனஉணர்ச்சி தானற்று இவ்வுலகில் வாழும்
மனமே உனக்கென்ன வாய்?

—முருகு-தமிழரசன், திருவையாறு.

❁

முந்தையோர் முத்தமிழை முட்டின்றித் தான்காத்துச்
செந்தமிழ் நாடென்றே செப்பிட்டார்-அந்த
இனமாக நீயிருந்தும் இன்றமிழ்நா டென்று
மனமே உனக்கென்ன வாய்?

—புலவர் ந. சி. அப்பாவு, சின்னபுங்கனேரி.

❁

இன்றில்லை என்றாலும் என்றேனும் ஓர்நாளில்
குன்றா வளங்கொண்டு கொண்டார்தான்—அன்பாய்
மனம்வைத்து வந்திடுவார்! மாய்க்கின்றாய் தூற்றி!
மனமே உனக்கென்ன வாய்?

—அமுதன், சென்னை-2.

❁

கூடிச் சுகமளித்துக் கொவ்வைக் கனிபெற்றார்
தேடி வரச்சென்றார் செம்பொன்னை-ஊடல்
முனமளித்த இன்பம் முழுதும் மறந்தாய்
மனமே உனக்கென்ன வாய்?

—மா. அரங்கநாதன், கொடைமலிங்கம்.

❁

வாட்டும் பசியோட்டி வாழ வழிதன்னைக்
காட்டும் கடல்நோக்கிக் கால்வைக்க-ஓட்டி
எனைக்கள்ளத் தோணி எனக்கூறி எள்ளும்
மனமே உனக்கென்ன வாய்?

—புலவர். அ. இமயவரம்பன், திண்டிவனம்.

❁

கன்னித் தமிழிருக்க, கையதனில் வாளிருக்க,
பன்னெடுங் காலமுயர் பண்பிருக்க-என்றும்
கனமே உளறுதல் கண்ணியமோ! சிந்தி
மனமே உனக்கென்ன வாய்?

—மு. கோவிந்தராசன், கூத்தங்குடி

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ.எல்.எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்